

# ரமணோதயம்

ஜனவரி 2015
காலாண்டு

ஜயந்தி இதழ்
விலை ₹ 20



ஸ்ரீ ரமண பகவானின் 135 மற்றும் 136ஆவது ஆகிய இரண்டு ஜயந்தி விழாக்களை உள்ளடக்கிய 2015 ஆம் ஆண்டிற்கான

## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

இவண்

ரமணோதயத்தை அச்சிடும் அச்சகம்


**Multi Craft**

**9, Appavu Gramani 2nd Street, Robertsonpet,**
**Mandaveli, Chennai 28**

உதயம் 14 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்
ஜனவரி 2015

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2015


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ரிபுகீதை | தியாகராஜன் | 14 |
| 3 | குரு ரமணர் - சிறந்த கண்காணிப்பாளர் | பிர. கிரிதர ஜகதீஷ் | 23 |
| 4 | பராபவ சூத்ரம் | கௌதமன் | 31 |
| 5 | நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை | Dr.ஏ.வி.ராஜகோபாலன் | 35 |
| 6 | இனிவரும் திருநாட்கள் | | 44 |
| 7 | பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி | 'ஓஷோ' ரஜனீஷ் | 45 |
| 8 | இனிவரும் திருநாட்கள் | | 44 |
| 9 | ரமணரைக் கண்டோமென கும்மியடி! | ரமண ராஜசேகர் | 52 |
| 10 | பகவான் ரமணர் கண்ட தமிழ் வேதாந்த நூல்கள் | | 53 |
| 11 | ஸ்ரீரமணரின் பொன்மொழிகள் | | 60 |
| 11 | நீங்கள் என்ன தனிநபரா? | | 61 |
| 12 | உள்ளே பாருமே - அது போதுமே | சு. பரமேஸ்வரன் | 64 |
| 13 | கேள்வி-பதில் | | 71 |
| 14 | செய்திகள் | | 72 |
| 15 | சுவாமி சாந்தானந்த பூரி | | 79 |


முன் அட்டை: கார்த்திகை மகாதீப நாளன்று சிறப்பு மலரலங்காரத்துடன் பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள் சந்நிதி

பின் அட்டை: அண்ணாமலை தீபம் ஸ்ரீரமணாச்ரமத்திலிருந்து...

# ஆசிரியர் உரை

## பகவான் எனும் பற்றுக்கோடு

இந்த இதழ் தங்கள் கரங்களில் தவழும்போது இரண்டு ஒளிபெரும் நிகழ்வுகள் நடந்திருக்கும். ஒன்று

*உன்னுவர் தங்கட்கு எல்லாம் உயர்வுறு முக்திநல்கி*
*தன்னிகரின்றித் தோன்றும் தனிப்பெரும் அருணசைலம்*

என்று கச்சியப்ப சிவாசாரியாரால் பாடப்பட்ட அருணையின் உச்சியில் ஏற்றப்பட்ட கார்த்திகை தீபத் திருநாள். மற்றொன்று அடியார் இதயம் எங்கும் நிரந்தரமாக ஜ்வலித்துக் கொண்டு இருக்கும் பகவானாம் பேரொளி அருள் கொண்டு இப்புவியில் தோன்றிய நாள். பற்றுக்கோடு இல்லாமல் உலகில் தள்ளாடி நடமாடும் நம் அனைவருக்கும் பற்றுக்கோடாக வந்த பகவான் அவதாரத் திருநாள்.

*பைங்கொடியாய் நான் பற்றின்றி வாடாமல்*
*பற்றுக் கோடாய்க்கா அருணாசலா*

- (அக்ஷரமணமாலை 72)

என்று பகவானே நம் சார்பாக வேண்டுகிறார் அல்லவா?

நம் தொல்லைகளிலிருந்து தற்காலிகமாக விடுபட நாம் பலவற்றைப் பற்றிக் கொள்கிறோம். ஆயினும் அவை அனைத்துமே நிரந்தரமற்றவை. நம்மைப் பெரும் துன்பத்திலிருந்து விடுபடச் செய்யும் திறன் அற்றவை பிறப்பு, இறப்பு ஆகிய பெரும் துன்பங்களில்

இருந்து விடுபட வேண்டுமாயின் பகவானை விடாமல் பற்றிக் கொள்ள வேண்டும். குடும்பம், ஆசை, புகழ் போன்ற பிற பற்றுக்கள் அறுபட்டபின் பகவானைப் பற்றிக் கொள்ளலாம் என்றால் அது நடவாத காரியம். அது கடலில் அலை ஓய்ந்தபின் ஸ்நாநம் செய்ய முற்படுவது போன்றது. இந்தப் பற்றுக்கள் அறுவதற்கே இறைவன் திருவடியை முதலில் பற்றிக் கொள்ள வேண்டும்.

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு*

என்பது திருக்குறள்.

நம்மைச் சுற்றிலும் பல்வேறு ஆன்மிக போதகர்கள் உள்ளார்களே! தொலைக்காட்சியைக் காணும்போதெல்லாம் தோன்றுகின்றார்களே! அவருள் பலரும் பளபளப்பான ஆடையுடனும் அதனை விடவும் ஜ்வலிக்கும் சொற்களாலும் நம்மைக் கவர்கிறார்களே? அவர்களை விட்டுவிட்டு, பகட்டே இல்லாமல் வெறும் கோவணம் மட்டுமே அணிந்து, "நான் யார்?" என்ற ஒரே உபதேசத்தை வலியுறுத்திய பகவானை ஏன் பற்றுக்கோடாய்க் கொள்ள வேண்டும்?

ஆற்றில் புதை மணல் இருக்கும். அந்தப் புதைமணலில் கால்கள் மாட்டிக் கொண்டால் அதை விட்டு வெளியே வரவேண்டுமாயின், காலைப் புதைமணலிலேயே ஊன்றி வெளியேவர முடியுமா? முடியாது. அவன் புதை மணலிலேயே மீண்டும் ஆழப் புதையுண்டு போவான். அந்தப் புதைமணலில் கிடக்கும் கட்டையையோ, அன்றி அங்கே புதைமணலில் சிக்கியுள்ள வேறு ஒருவனையே, பற்றிக்கொண்டு வெளியே வரமுடியுமா! அந்தக் கட்டையும், மனிதனும்கூட புதைமணலில் ஆழப் புதையுமே தவிர, வெளியே வர இயலாது. ஆனால் புதைமணலுக்கு



அப்பால் சில அடிகள் தள்ளி இருக்கின்ற மரத்தின் கொம்பையோ, மனிதனின் கையையோ பிடித்துக் கொண்டு முயன்றால் வெளியே வரலாம்.

அதைப் போலவே பற்று என்னும் புதைமணலில் மாட்டிக் கொண்டுள்ள நம்மைப் பற்றுக்களில் அழுந்தி உள்ள வேறு எவராலும் காப்பாற்ற முடியாது. பற்றுகட்கு அப்பால் உள்ள பற்றுகள் அறவே அற்ற ஒன்றைப் பற்றிக் கொண்டால் மட்டுமே இந்தப் பற்றுக்களில் இருந்து நாம் விடுபட முடியும். அந்தப் பற்றுக்கோடு தான், பற்று அனைத்தையும் கடந்த பகவான். பரிணாமத்தின் உச்சியை எட்டிய ஞானியராலும் நீக்க இயலாத தன்முனைப்பு - அகங்காரம் என்னும் பற்றை அறவே கடந்த பகவான். முருகக் கடவுளின் மறுபெயராகிய ஸ்கந்தன் என்பதற்கு, பற்றுக்கோடு என்பது மற்றொரு

பொருள். ஸ்கந்தப் பெருமானின் அவதாரமாகவே கருதப்பட்ட பகவானே நமக்கு உண்மையான பற்றுக்கோடு.

பகவானைப் பற்றுக்கோடாய்ப் பற்றிய அன்பர்கள் பலர் பற்றினைக் கடந்து சென்றனர்; பரமார்த்த நிலையை அடைந்தனர். இவருள் நம்மை மிகவும் கவர்வது 'நாயினைப் பொன் சிங்காதனத்தில் அமர்வித்ததுபோல் என் பற்றுகளை அறுத்து என்னை ஆண்டு கொண்டவன்' எனப் பாடும் முருகனாரின் மொழிகளைக் காண்போம்.

"மோகத்தால் தீண்டுவேன் அல்லது பரசிவ
யோகத்தை மனதாலும் தீண்ட அறியாத என்னை
என் அகங்காரம் அழியும்படி ஆட்கொண்டவன்"

எனப் புகழ்மாலை சூட்டும் முருகனார் தமது பல்வேறு பாடல்களில் ரமணபிரான் தனது உலகப் பற்றுகளை அறுத்ததைக் குறிப்பிடுகிறார். சிறுவயதில் வந்து, தின்பண்டம் விளையாட்டுகள் மீது கொண்டிருந்த பற்றும் ஆசையும், வயது செல்லச்செல்ல மங்கையர், பொருள், செல்வம், பங்களா என வளர்கிறது. ஆசையின் இலக்கு மாறுமே தவிர, ஆசைப்படுதல் நிற்பதில்லை. வயதாகி, மரண வாயிலில் நிற்கும் முதியவர்கூட பற்றினை விடுவதில்லை. 'என் பேத்தி திருமணத்தைப் பார்க்க வேண்டுமே' என்று ஏங்குவதைக் காண்கிறோம் அல்லவா? ரமண பகவான் தன் அடியார்களின் நீக்க இயலாத பற்றுக்களை நொடிப்பொழுதில் அறுத்து எறியும் வல்லபத்தை வியந்து பாடுகிறார் முருகனார். பற்றுக்களை அறுத்தல் என்பது ஆத்ம சாட்சாத்காரத்தின் அடிப்படைத் தகுதி என்றாலும், பகவான் மீது அவர்கொண்ட அளவிடற்கரிய பக்தியினால், தனது முயற்சி ஏதுமின்றியே பகவான் தனது பற்றுக்களை அறுத்ததாகக் கூறுகிறார்.

*பற்று அற்று நிற்கும் பரிசு அன்றோ, பண்டை வினைத்*
*தொற்று அற்று நிற்கச் செய் சூழ்ச்சி பராபரமே*
*- (ரமண சந்நிதி முறை 155)*

*"பற்றுஅற்ற பாவனநின் பற்றாலே மற்றவற்றின்*
*பற்றுஅற்று நிற்கும் பதம்அடைவது எந்நாளோ"*
*- (ரமண சந்நிதி முறை 149)*

*உலக வாழ்வில் வாழும்போது பற்பல செயல்களைச் செய்ய வேண்டி உள்ளதே! எங்ஙனம் பற்றற்ற வாழ்வினை இல்லறத்தார் நடத்த முடியும் என்ற கேள்விக்கும் விடை கிடைக்கிறது. பலாப்பழத்தை நறுக்கும்போது அதில் உள்ள பிசின் கையில் ஒட்டிக்கொள்ளும். பலாப்பழம் நறுக்குமுன் கையில் எண்ணெய் தடவிக்கொண்டு நறுக்கினால், அப்போது கையில் பிசின் ஒட்டாது. இறுதியில் பிசின் நீங்கிய இனிய சுளையைச் சுவைக்கலாம். அதுபோன்று, இந்த உடல் எடுத்து வாழ்க்கை நடத்துவதன் நோக்கமே, ஆத்ம சாட்சாத்காரம் என்னும் இனிய நிலையைச் சுவைப்பதுதான். ஆனால் இவ்வுலக வாழ்க்கை நடத்தும்போது, ஆசைகள் பற்றுகள் போன்றவை பிசின் போன்று ஒட்டிக்கொண்டு, நமது ஆத்மிகப் பரிணாமத்தைத் தடுக்கின்றன. பகவான்மீது கொண்டுள்ள ஆழ்ந்த பக்தி என்ற எண்ணையைக் கையில் தடவிக்கொண்டு இச் சம்சாரம் என்னும் பலாப்பழத்தை நறுக்கினால், பற்றுகள் என்னும் பிசின் கையில் ஒட்டிக் கொள்ளாது. இறுதியில் ஆத்ம தரிசனம் என்னும் இனிய கனியைச் சுவைக்கலாம் என்று வழிகாட்டுகிறார் முருகனார். 'சார்புரைத்தல்' என்ற ரமண சந்நிதிமுறைப் பதிகத்தில்,*

*"பாச பந்தம் அறுக்கும் பரரமண*
*ஈசன் தன்னடிக்கு ஏவல்செய்து அவ்விறை*
*நேசம் ஆக நிகழ்த்தும் திருவுளத்து*
*ஆசி பெற்றோர் அமரர்க்கும் உம்பரே"*
*- (ரமண சந்நிதிமுறை 76)*

இதன் பொருளாவது: “ரமணன் திருவடிக்குப் பணிபுரிவோர் அவ்விறைவனால் தமது பாச பந்தங்கள் அறுக்கப்பட்டு அப்பிரான் அன்போடு தரும் அருளாசியைப் பெற்று தேவர்கட்கும் மேலானவர் ஆவர்” என்பதே.

ஆத்மசாட்சாத்காரம் பெறுவது, நம் முயற்சியால் வருவது அல்ல. அது அவன் அருளாலேயே வருவது. நாம் செய்ய வேண்டியது எல்லாம் மனத்தைத் தூயதாக்கிக் கொள்ளல், பற்றின்மை என்ற நிலையை வளர்த்துக் கொள்ளல் என்பதே. அப்போது இறைவனே வந்து நம்மை ஆட்கொள்வான்.

பல்வேறு பிறவிகளில் நாம் பல்வேறு கருமங்களைப் புரிந்து பருத்த அழுக்கு மூட்டையைச் சேர்த்துக்கொண்டு நம் பகவானிடம் போகிறோம். அருள் வள்ளலாகிய பெருமான் நம் அழுக்கு மூட்டையை வாங்கி வைத்துக் கொண்டு, ஒரே ஒரு அழுக்கு வேட்டி, ஒரு அழுக்குத் துண்டு மட்டும் கொடுத்து, “உலகமாகிய ஆற்றுக்குப்போய் இவற்றையெல்லாம் நன்றாக வெளுத்துக்கொண்டு தூய்மையாக வா” என்று அனுப்புகிறான். உலகமாகிய ஆற்றில் அனுபவமாகிய கல்லில், நம் கருமங்களை துவைத்துத் தூய்மை செய்ய வேண்டும். புண்ணிய பாவம் என்ற இரண்டுமே கர்ம வினைகள்தாம். பல பிறவிகளாக நாம் சேர்த்து வைத்த அழுக்கு மூட்டை சஞ்சிதம் என்பதாகும். அது பகவானிடம் வைக்கப்பட்டுள்ளது. அத்தனை பிறவி அழுக்குகளையும் ஒரே அடியாய் ஒரே பிறவியில் நம்மால் போக்க இயலாது. நம் குருநாதன் நம்பாலுள்ள அருளால் “இத்தனையும் ஒரே அடியாய் வெளுத்து வா” என்று சொல்லாமல், அந்தப் பாவ கர்ம மூட்டையைத் தன்பால் வைத்துக் கொண்டு, “ஒரே ஓர் அழுக்கு வேட்டி, ஒரு துண்டோடு ஆற்றுக்குப் போய் வெளுத்து வா” என்று அனுப்புகிறான். அந்தப் பெரிய

கர்ம மூட்டை சஞ்சிதம். இப்பிறவியில் அனுபவிக்க நம்முடன் வந்துள்ள அழுக்கு வேட்டியும் துண்டும் பிராரப்தம் என்பது. இங்கே ஆற்றில் வந்து நமது பிராரப்த கர்மமாம் வேட்டி, துண்டை வாழ்க்கை அனுபவமாகிய கல்லில் மாசு அறத் தோய்த்து, நன்கு குளித்து தூய்மையாக வேண்டும். அதை விடுத்து, ஆற்றில் குளிக்காமல் மேலும் அழுக்குச் சேற்றைப் பூசிக் கொள்கிறோம். புதிதாய்ப் பூசிக் கொள்கிற சேற்றினை ஆகாம்யம் எனும் கர்மம் என்கிறோம்.

இப்பிறவியில் நாம் உள்ளம், உடலைத் தூய்மையாக்கிக் கொண்டு மனத் தூய்மையுடன் பகவானிடம் சென்றால், அவன் நமது பழைய அழுக்கு மூட்டையைத் தந்து, "அனைத்தையும் தோய்த்து வா என்று சொல்வதில்லை." நாம் தூய்மையுடன் அவனிடம் செல்லும்போது, நமது பழைய அழுக்கு மூட்டையை அவன் ஞானாக்கினியில் பொசுக்கி விடுகிறான். நமக்கு ஞானம் என்கிற புதிய ஆடையை அணிவிக்கிறான். இதுவே பகவானின் உள்ளது நாற்பதில் கூறும் உபதேசம். ஞானம் பெற்றோர்க்கு, 'கர்மம் மூன்றும் கழலும்' என்கிறார் பகவான். இந்த உலக வாழ்க்கை என்ற சேற்றைப் பூசிக் கொண்டிருந்த என்னை, தன் பேரருளால் தூய்மையாக்கினான் முருகன் என அருணகிரியார் கூறுகிறார் அல்லவா!

பேற்றைத் தவம்சற்றும் இல்லாத என்னை
ப்ரபஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வா!
- (கந்தர் அலங்காரம் 1)

பகவானின் இந்தப் பேரருளைப் பெற நாம் செய்ய வேண்டியது என்ன? அவன் பேரருளை நாடிப் பிரார்த்திப்பதே. இதையே முருகனார் சந்நிதி முறையில் குறிப்பிடுகிறார்.

*தீண்டாமை என்னும்தீத் தீட்டுஅற ஒழிந்து என்*
*சிந்தை தூயது ஆயிட வேண்டும்*
*வேண்டாமை என்னும் விழுப்பொருள் வேண்டும்*
*மெய்யுணர் உரம்பெற வேண்டும்*
*மூண்டாரு நின்புன் முறுவலுக்கு உணவா*
*முப்புரம் செற்றவேங் கடவா*
*ஈண்டாமை யிச்சை அவிச்சைவேறு அறச்செற்று*
*என்னையும் உண்ணக் கொண்டுஅருளே”*

*- (ஸ்ரீ ரமண சந்நிதிமுறை, 208)*

*ஈண்டாமை: சத்சங்கத்தில் சேராது இருத்தல்; இச்சை: ஆசை; அவிச்சை: அறியாமை*

*சித்தத் தூய்மையும், ஆசை இன்மையும்தான் அருளைப் பெற அடிப்படைத் தகுதிகள் என்னும் உண்மையை. இங்கே முருகனார் அழகுற எடுத்துக் கூறுகிறார்.*

*எல்லாவற்றிலும் பற்று நீக்கி பரமன் பதம் மட்டுமே பற்றியிருந்த முருகனார்க்கும் சம்பிரதாய சடங்குகள் மீது சிறிது பிடிப்பு இருந்தது. ஒருநாள் அதிகாலை. அன்று முருகனாரின் தந்தையின் திதி. அதற்கு மடியாகச் சமையல் செய்ய எண்ணிய முருகனார் வேட்டியைப் பிழிந்து உலர்த்திக் கொண்டு இருந்தார். அங்கு வந்த பகவான் “என்ன விசேஷம்? மடி வேஷ்டியா? ஓ! இன்று உங்கள் தந்தையின் சிரார்த்த தினம் அல்லவா? இங்கு வந்தாலும் கர்மங்கள் விடாது போலும்! சரி, பிராமணார்த்தத்திற்கு இரு நபர்கள் வேண்டுமல்லவா!” என்றுகூறி “இதோ, நான் ஒருவன் இருக்கிறேன்” என்று தன் நெஞ்சைத் தொட்டுக் காண்பித்து, “இன்னோர் பிராமணராக அங்கே உள்ள ரங்கராவை அழையுங்களேன்!” என்றார். அவ்வளவுதான்! பகவான் சந்நிதியில் இருக்கும்போது வேறு நியமங்கள் எதுவுமே தேவையில்லை என்பதைக் கணத்தில் உணர்ந்த முருகனார் அத்தகைய நியமங்களை அன்றே நீத்தார்.*

மீண்டும் அடுத்த ஆண்டு சிரார்த்த தினத்தன்று நியமங்கள் செய்யாவிடினும் ஒரு பலாப்பழமாவது படைக்கலாம் என்று எண்ணிய முருகனார் ஒரு பலாப்பழத்தைக் கொணர்ந்து அதிகாலை சமையல் கூடத்தில் வைத்தார். அங்கு வந்த பகவான், "என்ன வாசனை இது? ஓ! திதியன்று பலாப்பழம் படையலோ? என்ன செய்வது? வாசனை எங்கே விடுகின்றது?" என்று வாசனை என்ற சொல்லைச் சிலேடையாக உபயோகித்தார். அவ்வளவுதான்! உலகச் சடங்குகளிடம் முருகனாருக்கு இருந்த கடைசிப் பற்றும் பட்டென அறுந்தது. பற்றுகளை நீக்கப் பகவானே நேரில் வந்து அருளிய செயல் இது.

இப்பற்றுகள் அனைத்தும் போனாலும், மிகச் சிறந்த தமிழறிஞரான அவருக்கு திருக்குறள் போன்ற தமிழ் நூல்கள் மீது அளவிறந்த விருப்பம் இருந்தது. இந்தத் தெளிந்த ஆசையும் இறுதியில் மறைந்து போனது.

"வள்ளுவர் முற்சில வண்தமிழ் நூலில்
தெள்ளிய ஆசையும் தீர்ந்தது"

என்று கூறும் இறைவன் திருவடி நீழலில் உறைய வேண்டும் என்ற ஒரே எண்ணமே என் உள்ளம் முழுதையும் ஆட்கொண்டு விட்டது. மற்ற ஆசைகட்கு அங்கு இடமே இல்லை என்கிறார் முருகனார்.

ரமண ஞான போதம் என்றும் உயரிய நூல் தொகுப்பில் முருகனார் பாடுகிறார்.

இருட்பாழ் அகல இதயத்து எழுந்த
புரிப்பான சுத்த அருள் போத சொரூபன்
சுரப்பான மோன சொரூப அமைதி
விருப்பால் ஒழிந்தது அயல் வேட்கை எல்லாமே

- (ரமண ஞான போதம் 5-57)

அஞ்ஞான இருள் நீங்கும்படி என் இதயத்தில் மலர்ந்த ஞான ஸ்வரூபனாம் ரமணன் சொரிந்த அனுபூதியினால்

என் உள்ளத்தில் இதுகாறும் இருந்த ஆசைகள் அனைத்தும் அழிந்தன என்கிறார் முருகனார். ஈசன் அருளால் ஆசைகள் முற்றும் நீங்கியபின் மௌனமாம் பேருணர்வு என்னை முழுதுமாக ஆட்கொண்டு விட்டது என்கிறார்.

*“ஆசை அற அருட்பரையாய் ஆர்ந்தது எனக்கு*
*ஓசை அற்ற மோன உணர்வு*

*- (ரமண ஞான போதம் 62)*

*நீளப் படைத்த சிவநேயம் மிகக் கூர்தலால்*
*மாள்வுற்றது ஆசை மயல்*

*- (ரமண ஞான போதம் 63)*

*(பரை: அருள் பூரணமாய் பொழிந்த நிலை*
*மிகக் கூர்தல்: மிகுதி ஆதல்)*

மற்ற பற்றுகள் எதுவும் என்னைப் பற்றாதபடி உள்ளத்தே இறைவன்மீது உள்ள பற்று நிரம்பித் தளும்பியது. அப்போது ஆசைகளால் ஏற்பட்ட பற்றுகள் அனைத்தும் ஒழிந்தன.

*மற்றொரு பற்றும் மனதில் எழாமல் என்னைப்*
*பற்றிற்று இறைவன் பற்று*
*உடையான் அருளால் ஒழிந்தது வெம்பாலுப்*
*படையால் விளைந்த படர்*

*- (ரமண ஞான போதம் 5-919)*

ரமண புராணத்திலும்

*“பற்றாகத் தன்னடியே பற்றி அந்தப் பற்றுக்கே*
*அற்றார்கட்கு அற்றானாய் அற்றேன் அடிபோற்றி”*

*- (ரமண புராணம் வரி 209-210)*

இங்கே பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் பாடியுள்ள விநாயகர் வாழ்த்தை நினைவு கூர்வோம்:

*“உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும்*
*தறிநிறுவி உறுதி யாகத்*
*தள்ளரிய அன்புஎனும் தொடர்பூட்டி*

*இடைப்படுத்தித் தறுகண் பாசக்*
*கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்*
*களித்துண்டு கருணை என்னும்*
*வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை*
*நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்."*

சத்குருநாதன் என்னும் யானை தன்னை அண்டிய அன்பர்களின் வேண்டுதலை நிறைவேற்றும் பெருங் கருணை கொண்டது. உள்ளம் என்னும் கூடத்தில் ஊக்கம் என்னும் தறியை ஊன்றி, நிறைந்த அன்பு என்னும் சங்கிலியை உறுதியாகப் பூட்டி அந்த விக்னேஸ்வர யானையைக் கட்ட வேண்டுமாம்! நாம் நம்மிடம் உள்ள அறியாமையை அதற்குக் கவளமாய்க் கொடுத்தால் போதும். பிறகு அளவற்ற அருளைப் பொழியும் என்கிறார் பரஞ்சோதியார்.

*பற்றுக்கோடாய் பகவானைப் பற்றுவோம்!*

*பகவான் பணியில் தங்கள்*

*ராம்மோஹன்*

*ரமண இணையதளங்கள்*

Sri Ramanasramam, Tiruvannamalai
www.sriramanamaharshi.org

Arunachala Ashrama, New York
http://www.arunachala.org

Ramanalayam, Chromepet and for Ramanodhayam issues
www.ramanalayam.org

# ரிபு கீதை

## தியாகராஜன்

அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையில் 26வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால், அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, அவை தொடர்பாய் ஸ்ரீ பகவான் அவ்வப்போது அருளியுள்ள விளக்கங்களோடு அடியவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

*எதையகமென் றதிதிடமா யறிந்தான் மற்று*
*மெள்ளளவு மிதரத்தை அறிய வேண்டா*
*மெதையகமென் றதிதிடமா யறிந்த தாலே*
*யாவையுமே யெப்போது மறிந்த தாகு*
*மெதையகமென் றதிதிடமா யறிந்த தாலே*
*யெச்செயலுஞ் செய்துமுடிந் ததுவே யாகு*
*மதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்.* [26/25 ]

*எதனையகம் பிரமமெனு நிச்ச யத்தா*
*லிடரறவே யெளிதாக வடைய லாகு*
*மெதனிடையந் நிச்சயமுஞ் சாந்த மானா*
*லேகபரி பூரணவா நந்தந் தோன்று*
*மெதனிடையின் மனதுலயித் திருக்குங் காலை*
*யிணையற்ற நிரதிசய திருத்தி மேவு*
*மதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்.* [26/26 ]

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.8,9 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: மனவியக்கமற்றுச் சும்மாவிருக்கும் அமைதியே ஆத்மானுபவம். அவ்வனுபூதி இல்லாத நேரமே இல்லை. ஆனால் அவ்வனுபவம் விளங்கவில்லையே என்னும் பிரமை (தப்பெண்ணம்) இருக்குமட்டும் அதைத் தொலைக்க முயன்றுதான் ஆகவேண்டும். ஆத்மாவை அநாத்மாவோடு சம்பந்தப் படுத்துவதாலேயே தப்பெண்ணங்கள் எழுகின்றன. விசாரணையால் அநாத்மத் தோற்றம் நீங்க, எப்போதுமுள்ள ஆன்ம சொரூபம் தடையற்றுத் துலங்கும். இடமென்பது புதிதாய் உண்டாவதில்லை; எப்போதும் இருப்பதே; அடைத்துக் கொண்டிருப்பவற்றை அகற்றினால் இடம் தடையற்று விளங்குகிறது. எண்ணங்களற்றால் அங்கே ஒன்றுமில்லை சூன்யமே என்பது தவறு. இருப்பிற்கும் இன்மைக்கும் சாக்ஷியாம் ஒன்று என்றும் இருந்து கொண்டேயிருக்கிறது. அறிவும் அறியாமையும் மனத்தைப் பற்றியவை. இந்த துவந்த்வத்திற்கு அப்பாலுள்ளது ஆத்மா. அது தானே ஒளிர்வது. அதைக் காண வேறோர் ஒளி வேண்டுவதில்லை. அனாத்மா ஆத்மாவைக் காணமுடியாது. ஆத்மா இந்த மனோ வியாபாரங்களைக் கடந்ததாய் தன்னந்தனியே கேவல ஞப்தி மாத்திரமாய் பிரகாசித்துக் கொண்டுள்ளது. தன்னைத் தான் உணரினும் உணராவிடினும் ஆத்மா என்றும் ஒளிர்ந்து கொண்டேயுள்ளது. அநாத்மாவை ஆத்மாவாய் மயங்குவது நீங்கினால் நித்ய ஸித்தமாம் ஆத்மா அங்கே தானேதானாய் இங்கே இப்போதே ஒளிரும். அஞ்ஞான நீக்கமே ஆத்ம ஞானமெனப்படும்.*

*[அநுதின. ஸ்ரீ பக. 209-11 - பதிப்பு 2003] கே: எனக்கு சஹஜ நிலையில் நம்பிக்கை இல்லை. ஒன்று பூரண வஸ்துவைப் பார்த்து, வேறொன்றையும் பாராமல் இருக்க வேண்டும். அல்லது உலகத்தைப் பார்த்து பூரணத்தைப் பார்க்க இயலாமல் இருக்க வேண்டும்.*

ஸ்ரீ பக: ஞானி ஆன்மாவை மட்டும்தான் பார்க்கிறார். அனைத்தையும் ஆன்மாவில் பார்க்கிறார். உதாரணமாக கண்ணாடியில் ஒரு பிரதிபிம்பத்தையும், கண்ணாடியையும் பார்க்கிறார். கண்ணாடி உண்மை யென்றும், பிம்பம் வெறும் பிரதிபலிப்பென்றும் உனக்குத் தெரியும். கண்ணாடியைப் பார்ப்பதற்கு, பிம்பத்தைப் பார்க்காமல் இருக்க வேண்டுமா. அல்லது திரையின் உபமானத்தை எடுத்துக் கொள். ஒரு திரை இருக்கிறது. அதில் ஓர் உருவம் வருகிறது. அதே திரையில் வேறு படங்கள் தோன்றுகின்றன. முதல் உருவம் அந்தப் படங்களை பார்த்துக் கொண்டே இருக்கிறது. நீ திரையானால், திரை என்று அறிந்தாயானால், முதல் உருவத்தையும் மற்ற படங்களையும் பார்க்காமல் இருக்க வேண்டுமா? திரையை அறியாதபோது நீ உருவத்தையும் படங்களையும் நிஜமென நினைக்கிறாய். ஆனால் திரையை உணர்ந்து, அது மட்டுமே உண்மை, அதை அடிப்படையாகக் கொண்டுதான், உருவமும் படங்களின் நிழல்களும் விழுகின்றன என உணர்ந்தால், அவை வெறும் நிழல்களே என அறிவாய். நிழல்களை, அவை நிழல்கள் மாத்திரமெனப் பார்த்து, உன்னை அவற்றிற்கு ஆதாரமான திரை எனவும் உணர்வாய்.

[அநுதின. ஸ்ரீ பக. 276 - பதிப்பு 2003] ஜீவன் முக்தனைப் பற்றிய சந்தேகங்களுக்கான விளக்கத்தை ஸ்ரீ பகவான் பின்வருமாறு அருளினார்: “வாழ்க்கைக்கும் செயலுக்கும் மனதின் உதவி தேவைப் பட்டாலும், மனமில்லாமல் ஞானி எப்படி வாழ்ந்து செயல்படுகிறான் என்பதை நாம் புரிந்து கொள்ளச் செய்வதற்காக அனேக உதாரணங்கள் புத்தகங்களில் தரப்பட்டுள்ளன. பானை உருப் பெற்றுவிட்ட தென்று குயவன் சக்கரத்தை சுழற்றுவதை நிறுத்திவிட்ட பின்னும் அவனுடைய சக்கரம் எப்படி சுழன்று கொண்டிருக்குமோ, மின்சாரத்தை நிறுத்திய பின்னரும் மின்சார விசிறி சில நிமிடங்களுக்கு எப்படிச்

*சுழலுகிறதோ, அவ்வாறே உடம்பை சிருஷ்டித்த ப்ராரப்தம் அந்த உடம்பு எதற்காக சிருஷ்டிக்கப் பட்டதோ அவற்றைச் செய்விக்கும். ஆனால் ஞானி தான் செய்கிறோமென்ற உணர்வில்லாமல் அனைத்தையும் செய்கிறான். இது எப்படி என்று புரிந்து கொள்வது கடினம். பொதுவாக இதற்குக் கொடுக்கப்படும் உதாரணம் என்னவென்றால், குழந்தையை தூக்கத்திலிருந்து எழுப்பி உணவூட்டினால் உண்கிறது. ஆனால் மறுநாள் காலை, தான் உண்டது அதற்கு நினைவிருப்பதில்லை - இது போலவே ஞானி செயல்படுகிறான். நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், இந்த விளக்கங்களெல்லாம் ஞானிக்கு அல்ல; அவன் அறிவான்; அவனுக்கு சந்தேகம் ஒன்றுமில்லை. தான் இந்த உடம்பு இல்லையென்றும், தேகம் ஏதாவது செயலில் ஈடுபட்டிருந்தாலும், தான் ஒன்றும் செய்யவில்லை என்றும் அவனுக்குத் தெரியும். இந்த விளக்கங்களெல்லாம், ஞானியை சரீரம் உடையவன் என்று நினைத்து அவனை சரீரமாக அடையாளம் கண்டு கொள்ளுவதைத் தவிர்க்க முடியாத பார்வையாளருக்கு மட்டுமே.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.36 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: நான் என்னும் நினைப்பின் எழுச்சியே பிறப்பு, அதன் ஒடுக்கமே சாவு. அகந்தை தனியே நிற்க முடியாது. ஓர் உடலுடன் அது தன்னை சம்பந்தப்படுத்திக் கொண்டு எனதென்று பற்பல அபிமானங்களுற்றுக் குழப்பமுறுகின்றது. இக் குழப்பம் நீங்க, உடல் நான் என்னும் அபிமானத்தை இடைவிடா விசாரத்தால் நீக்கி, பிறப்பு இறப்பற்ற ஆத்மாவே நான் என்று உணரவேண்டும். ஆத்ம திருஷ்டி உற்றால் பிறரையும் உடல் உற்றவர்களாய்க் கருத மாட்டோம். யாவரும் அனைத்தும் ஆத்மாகாரமாகவே விளங்கும். யாதோர் வேற்றுமைக்கோ, அபிமானத்திற்கோ,*

*அதனால் உறும் துயரத்திற்கோ அங்கோர் இடமில்லை. இவ்வாறு, பிரிவுறா ஒன்றாம் ஆன்மாவை உணர்ந்து அதுவாகவே நிலைக்கு மட்டும் துன்பத்திற்கோர் முடிவில்லை.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.159- பதிப்பு 2000] ஸ்ரீ பக: உலகம் என்பது என்ன? அமைதி என்பது யாது? அதற்காக வேலை செய்பவன் யார்? ஆழ்ந்த தூக்கத்தில் உலகமும் இல்லை அதனைக் காண்பவனும் அதைப் பற்றி நினைப்பவனும் இல்லை. அமைதி ஒன்றே உளது. ஆதலின் நினைப்பின் விவேக உலகமும் அதைப் பற்றிய பிரச்சனைகள் யாவும் என்று உணர்ந்து நினைப்பற நிற்கப் பயில வேண்டும். நினைப்பவன் தோன்றி மறைகிறான். அதன் மூலத்தேயுள்ள நமது நிஜஸ்வரூபம் தோற்றமும் மறைவும் இல்லாதது. ஒரே அமைதி மயமானது. என்றும் எவர்க்கும் இயல்பாம் அவ் ஏகாத்ம ஸ்வரூபத்தில் நிலைபெறலே அமைதியை நிலை நாட்டலாம்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1- பக்.105,106 - பதிப்பு 2004] விவகாரத்தில் இருக்கிறேன், நான் செய்கிறேன் என்று நினைப்பதேன்? இப்பொழுது நீங்கள் இவ்விடம் வந்து சேர்ந்திருப்பதை எடுத்துக் கொள்வோம். வீட்டை விட்டு வண்டியிலேறி, ரயில்வே நிலையம் சேர்ந்து அங்கிருந்து ரயிலும் பிறகு வண்டியிலுமாக ஆச்ரமம் வந்து சேர்ந்தீர்கள். பிரயாணம் செய்தது, ஓடியதெல்லாம் வண்டிகளேயாயினும் இவ்வளவு தூரமும் நாமே பிரயாணம் செய்ததாகக் கூறுகிறோம். அவ்வாறேதான் எல்லாச் செயல்களும். ஏதோ ஒன்று நடத்திக் கொண்டு போகிறது. அதையறியாது, நான் செய்தேன், செய்கிறேன் என்று நினைக்கிறோம், கவலைப்படுகிறோம்.*

*[அநுதின. ஸ்ரீ பக. 276 - பதிப்பு 2003] ஸ்ரீ பக: கவலைப்படாதே. இந்த ஜன்மத்தில் என்ன வேலை*

*உன்னால் செய்யப்பட வேண்டுமென்று விதி நிர்ணயித்திருக்கிறதோ, அது உனக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், உன்னால் செய்யப்பட்டு விடும். 26] நான் கர்த்தா எனும் கர்த்ருத்துவ புத்தியை விட்டும், கர்மங்களில் பற்றற்றும், அவற்றின் பலனையும் எதிர்பாராதிருப்பதே கர்மத்தை விடுதல் என்று சொல்லுவதின் பொருள்.*

*[ஸ்ரீ ரமண மஹரிஷியின் பொன்மொழிகள் - பக்.176,177 - பதிப்பு 2004] கே: பிரும்மத்தை அறிந்தவன் பிரும்மமாகவே ஆகிவிடுகிறான் என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றனவே?*

*ஸ்ரீபக: 'ஆகிவிடும்' விஷயம் அல்ல அது. அதுவாகவே (பிரும்மமாகவே) இருப்பதே உண்மை. அடைவதற்கு என்று இலக்கு ஒன்றும் கிடையாது. எதையோ பெறுவதற்கும் ஏதுமில்லை. ஆன்மாவே நீங்கள்; அதாவது, ஆன்ம ஸ்வரூபமாகவே நீங்கள் எப்போதும் இருந்து வருகிறீர்கள். ஆன்மாவைப் பற்றிய உண்மையை உறுதிப்படுத்த, 'ஆன்மாவாகவே இருக்கிறோம்' என்று உணர்வதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை. கடவுளை அல்லது ஆன்மாவைக் காண்பது என்றால், ஆன்மாவாகவே இருப்பது, அதாவது நீங்கள் உண்மையில் உள்ளபடி இருப்புக் கொள்வதே ஆகும். காண்பது என்றால் நிலைபேறு கொள்வது. ஆன்மாவாகவே இருக்கும் நீங்கள் ஆன்மாவை எட்டுவது எவ்வாறு என்று அறிய விரும்புகிறீர்கள்! ரமணாச்ரமத்தில் இருந்துகொண்டே, 'ரமணாச்ரமம் செல்வதற்கு எந்தெந்த வழிகள் உள்ளன? அவற்றுள் எது சிறந்த சுலப வழி?' என்று கேட்பதற்கு ஒப்பானதே இந்தக் கூற்று! நீங்கள் செய்ய வேண்டியது இதுவே: 'உடல் நானே' என்கிற எண்ணத்தைக் கைவிடுக. புறப் பொருள்கள், தோற்றங்கள் பற்றிய எண்ணங்கள் - அதாவது அனாத்ம விஷயங்கள் -*

*யாவற்றையும் தவிர்க்கவும். புறப் பொருள்களைப் பற்றிய எண்ணங்களில் மனம் வெளிமுகமாக மேயத் தொடங்கும்போதே அதை நிறுத்தி ஆன்மாவில் - அல்லது மெய்யான நான் என்கிற உள்ளுணர்வில் - பதிய வையுங்கள். நீங்கள் செய்ய வேண்டிய முயற்சி இம்மட்டுமே!.*

*[ஶ்ரீ ரமண மஹாஷியின் பொன்மொழிகள் - பக்.197 - பதிப்பு 2004] உள்ளது நாற்பது பாடல் 32 - பொருள் " 'அது நீ' (தத்வம் அஸி) என்று மறைநூல்கள் வலியுறுத்திக் கூறினால், உடனே 'எது நான்?', 'நான் யார்?' என்ற கவனத்துடன் தன்னை நாடவேண்டுஎ தவிர, 'அந்த பிரம்மம் நான்' என்று எண்ணுவது (தியானிப்பது) மன உரமின்மையின் அறிகுறியே அன்றி வேறல்ல. ஏனெனில் நீங்கள் அதுவாகவே என்றென்றும் நிலை கொண்டுள்ளீர்கள்.*

*[ஶ்ரீ ரமண மஹரிஷியின் பொன்மொழிகள் - பக்.198,199 - பதிப்பு 2004] 'அஹம் பிரஹ்மாஸ்மி' என்னும் நினைப்பைப் பற்றுகிறோம்; மறப்பும் தொடர்கிறது; அகந்தை எழுகிறது; மரண பயம் தோன்றுகிறது. நினைப்பும் மறப்பும் அகந்தைக்கே. அதை ஓடவிடாது இறுகப் பிடித்தால், பிடிபடாது நிழலென மறந்துவிடும். உண்மையான நானே அங்கு மிகுந்திருக்கும். அதுவே ஆன்மா. 'அஹம் பிரஹ்மாஸ்மி' என்னும் நினைப்பு, பிற நினைப்புகளை அகற்றுவதால், தியானத்திற்கு அனுகூலமானதே. 'அஹம் பிரஹ்மாஸ்மி' என்னும் ஒரே நினைவில் மனதை ஒடுக்கியதும், அவ்வாறு நினைப்பது எது என்று கவனிக்க வேண்டும். நினைப்பது நான் என்னும் அகந்தையே. அது எங்கிருந்து எப்படிக் கிளம்புகிறதென்று கூர்ந்து நோக்கினால் அகந்தை மறைந்துவிடும். அங்கே பரமாத்ம சொரூபமே துலங்கும். அத்துடன் எல்லாம் முடிந்தது.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1- பக்.43 - பதிப்பு 2004] ப்ரஹ்மஸ்வரூபமே பரமானந்தம். அவ்வகண்டாத்மாவே சாந்திமயம். உணர்வே உருவாயுள்ளது அதுவே; ஞான விசாரத்தின் முடிவிதுவே; பக்தி நிலையின் முடிவும் இதுவே. அமைதியையும் ஆனந்தத்தையும் ஈசனை ஆச்ரயித்து அவனருளாற் பெறுகின்றோம். ஆனந்தத்தை அருள்பவன் அகண்டானந்த மயனாய் இருத்தல் வேண்டும். ஸர்வ சக்தனாம் அவ் ஆனந்தமயனையே சகுணப் பிரஹ்மம் அல்லது ஈசன் என வழங்குகின்றோம். நிர்குணப் பிரஹ்மமோ கேவல ஆனந்த மயம். பிரஹ்ம ஸ்வரூபத்தினின்று ஈசன் வாயிலாய் இருப்பைப் பெறும் ஜீவர்களும், யதார்த்தத்தில் ஆனந்த இயல்பினரே. ஆனந்தமில்லாவிடில், ஜீவர்களின் இருப்பே, வளர்ச்சியோ, பெருக்கமோ ஒன்றுமே நிகழாது. "பரந்த இவ் ஆனந்தமில்லா விடில், எவனே உயிர் தரித்திருக்க முடியும்?" (தைத்திரீய உபனிஷத்)*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1- பக்.36 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: வெளி விஷயங்களெல்லாம் நிலையற்று நசிப்பதை உணர்ந்தால் அதனால் விஷய விரக்தி உண்டாகும். ஆகவே, விசாரணையே முக்கியமிக்க முதற்படி. அவ்விசாரணையால் உலக இன்பங்கள், செல்வம், பெயர், புகழ் முதலியவற்றில் துச்ச புத்தி யுண்டாம். இவ்விதம் விரக்தியுற்ற புத்திக்கு நான் யாரென்னும் விசாரணை வழி தெளிவாய் விளங்கும். அதுவே அடைதற்குரிய இடம். சாதகனது அமைப்பு விசாரத்திற்கு இடம் கொடாவிடில் பக்தி மார்க்கத்தை அனுசரிக்கலாம். ஈசனிடமோ, குருவினிடமோ அல்லது தர்மம், பரோபகாரம், அன்பு, அழகு என்னும் லக்ஷ்யங்களிலோ முழுமனமும் ஈடுபட்டால் பிற பற்றுதல்கள் குன்றி ஏகாக்ரதை உண்டாகும்.*

*[ஸ்ரீ ரமண மஹரிஷியின் பொன்மொழிகள் - பக்.112 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: ஏகாந்தம்*

மனத்தில் உள்ளது. ஒருவன் கடின விவகாரத்தின் இடையிலும் முழு அமைதியுடன் இருக்கலாம். அவன் எப்பொழுதும் ஏகாந்தவாசியே. மற்றொருவன் காட்டில் வசிக்கலாம். ஆனாலும் மனத்தைக் கட்ட வகையற்று இருப்பானாயின், அவன் காட்டில் ஏகாந்தமாக இருப்பதாகச் சொல்ல முடியாது. ஏகாந்தம் என்பது மனத்தின் பாங்கு; வெளி விஷயங்களில் பற்றுள்ளவன் எங்கிருந்தாலும் ஏகாந்தமுறான். பற்றற்றவனோ எப்பொழுதும் ஏகாந்தத்திலேயே இருக்கிறான்.

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.159- பதிப்பு 2000]* ஏதோ சில விஷயங்களைத் தவிர்த்திருப்பதையே வைராக்யமென்று பலரும் கருதுகின்றனர். ஆனால் வைராக்யமென்பதன் உண்மைப் பொருள் யாதெனில், ஆத்மாவாம் தனக்கயலாய் ஏதுமின்மையின், விருப்பு வெறுப்புக்கள் உறுதற்கு இடமேயற்ற தன்னிலை நிற்றலேயாம்.

*[நான் யார்- பக்.8- பதிப்பு 2008]* ஈசன் மேல் எவ்வளவு பாரத்தைப் போட்டாலும், அவ்வளவையும் அவர் வகித்துக் கொள்ளுகிறார். சகல காரியங்களையும் ஒரு பரமேச்வர சக்தி நடத்திக் கொண்டிருக்கிறபடியால், நாமும் அகற்கு அடங்கியிராமல், 'இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச் செய்ய வேண்டும்' என்று சதா சிந்திப்பதேன்? புகை வண்டி சகல பாரங்களையும் தாங்கிக் கொண்டு போவது தெரிந்து இருந்தும் அதிலேறிக் கொண்டு போகும் நாம் நம்முடைய சிறிய மூட்டையையும் அதிற் போட்டுவிட்டுச் சுகமாயிராமல், அதை நமது தலையிற் தாங்கிக் கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்?

# குரு ரமணர் - சிறந்த கண்காணிப்பாளர்

**பிர. கிரிதர ஜகதீஷ்**

வேதங்கள் இரண்டு விஷயங்களில் மட்டும் அதிகமான ஆர்வம் காட்டுகின்றன. அவைகள்:

1. பிரம்மம் சத்யம்

2. ஜகத் மித்யா

இவைகளைத் தவிர்த்து மற்றபடி ஏகதேசமாகப் பேசப்படும் விதவிதமான கர்மங்கள், பாவனைகள், பண்புகள், உபாசனைகள், பூஜைகள், ஜபங்கள் போன்ற அனைத்துமே பிரம்மம் சத்யம், ஜகத் மித்யா என்ற இக்கருத்தை உறுதி செய்யும் நோக்கிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன.

இக்கருத்தை பகவான் ரமணர் தமது மொழி நடையில் ஆத்ம சாதனம், ஆத்ம சகாயம் என்று வார்த்தை வடிவங்கள் தருகிறார்.

நான் யார் என்ற ஞான விசாரமே ஆத்ம சாதனம் ஆகிறது. அதற்கு தகுதிப்படுத்தும் சாதனங்களான பூஜை, ஜபம், பிராணாயாமம், உபவாசம், பாராயணம் போன்ற அனைத்து சாதனங்களும் ஆத்மசகாயங்கள் ஆகின்றன. அதாவது ஆத்ம சாதனத்திற்குத் துணைபுரிகின்ற சாதனங்கள் ஆகின்றன.

பகவான் ரமணரின் நான் யார் என்ற ஆத்ம விசாரணையில் பிரம்மம் சத்யம், ஜகத் மித்யா என்ற



இரண்டு கருத்துகளும் நுனிமுதல் வேர்வரை நன்கு ஆராயப்படுகின்றன. ஏனென்றால் பிரம்மத்தின் சைதன்ய அம்சம், ஜகத்தின் மாயா அம்சம் இரண்டும் சேர்ந்த கலவையாக 'நான்' என்ற தத்துவம் கட்டப்பட்டிருக்கிறது. சிமெண்டும், செங்கல்லும் சேர்ந்து இறுகி சுவராக நின்று கொண்டிருப்பதுபோல மாயையும், சைதன்யமும் ஒன்று சேர்ந்து 'நான்' என்ற ஒரு புதுத் தோற்றத்தை நிகழ்த்தியிருக்கிறது.

ஆகவே இந்த 'நானை' விசாரிப்பதன்மூலம் இதற்கு மூலகாரணங்களாகிய மற்ற இரண்டு தத்துவங்களையும் என்ன என்று தொட்டுப் பார்த்துவிடலாம் என்பது ரமணரின் விஞ்ஞானம்.

இரண்டு திருடர்கள். இருவரும் கூட்டாளிகள். இருவரும் திருடனாக இருந்தாலும் ஒருவன்

நல்லவன். மற்றவன் போக்கிரிக் குணம் உடையவன். இருவருமே கையில் அகப்படாமல் தப்பித்துக் கொண்டேயிருக்கிறார்கள். இந்த நெருக்கடியான சமயத்தில் இந்த இருவரோடு சம்பந்தப்பட்ட மூன்றாவதான ஒரு ஆள் காவலர்கள் கையில் சிக்குகின்றான். அவன்தான் 'ஜீவன்'. குரு, சாஸ்திரங்களின் பிடியில் இந்த ஜீவன் நன்கு துருவித் துருவி விசாரணை செய்யப்படுகிறான். இந்த ஜீவன் என்ற ஆளை விசாரித்தால் பிரம்மம் என்ற நல்ல திருடனும், மாயை என்ற போக்கிரித் திருடனும் நிச்சயம் கையகப்படுவார்கள் என்பது சாஸ்திரங்களின் துணிபு.

ரமண விசாரணை சற்று வித்தியாசமானது. ஜீவனிடம் ஜீவனைப்பற்றி மட்டும்தான் விசாரணை நடைபெறுகிறது. பிரம்மத்தைப் பற்றியோ, மாயையைப் பற்றியோ அங்கு எந்தப் பேச்சும் நடைபெறுவதில்லை. விசாரணை தீவிரமாகும் நிலையில் இந்த ஜீவனிடமே பிரம்மமும், மாயையும் ஒளிந்து கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்படுகிறது. ஜீவனிடமுள்ள சைதன்யமே பிரம்மமாகவும், காரண, சூக்ஷ்ம, ஸ்தூல சரீரங்களே மாயையாகவும் இருந்து கொண்டிருப்பது தெரிய வருகிறது. சைதன்யமாகிய அறிவே 'நான்' என்ற சப்தத்திற்கு உரிய பொருள் என்று உணரப்பட்டு, சரீரத்ரயமாகிய உடல்கள் என்பன வெறும் தோற்றம், வெற்று அனுபவங்கள் என்றும் முடிவு செய்யப்பட்டு விசாரணை முற்றுப் பெறுகிறது.

இத்தனை விஷயங்களும் ரமண சந்நிதியில் நிகழ்கின்றன. சிலருக்குப் பத்து வருடங்கள் ஆகலாம். சிலருக்கு பத்து மாதங்கள் பிடிக்கலாம். வேறு சிலருக்கு ஒரு வருடம் ஆகலாம். இன்னும் சிலருக்கு ஒரு நாளில் முடியலாம். சிலருக்கோ ஒரு சில மணித் துளிகளில் நடந்தேறலாம்.

பகவானின் அருள் மழையில் பாரபட்சமில்லை. அதை வாங்கிக் கொள்ளும் பாத்திரங்களில் பாரபட்சம் இருக்கிறது. ஆகவே சாதகர்களுக்கு இடையே தாரதம்மியம் ஏற்படுகிறது.

ரமண சந்நிதியின் ஆகர்ஷணம் (ஈர்ப்பு) எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறது. ரமணாஸ்ரமத்தில் மட்டுமல்ல; பகவானது கண்காணிப்பு நம்முடைய நிழல்போல எப்பொழுதும் நம்மைத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. சாத்விக குணம் மேலோங்கும்பொழுது தூசு துடைக்கப்பட்ட கண்ணாடியைப்போல இவ்வுண்மை புலப்படும்.

முண்டக உபநிஷத்தில் ஒரு மந்திரம் இவ்வாறு பேசுகிறது:

*யதா$^{3}$ லேலாயதே ஹர்சி: ஸமித்$^{3}$தே$^{4}$ ஹவ்ய வாஹனே!*
*ததா$^{3}$ஜ்யபா$^{4}$கா$^{3}$வந்தரேண ஆஹுதீ ப்ரதிபாத$^{3}$யேத்!!*

“எப்பொழுது நன்கு தூண்டிவிடப்பட்ட நெருப்பில் சுடரானது மேல்நோக்கியுள்ளதோ, அப்பொழுது வடக்குப் பகுதிக்கும் தெற்குப் பகுதிக்கும் இடையில் யாகத்திற்கான பொருட்களை அர்ப்பணம் செய்ய வேண்டும்.”

கர்மகாண்ட பரமாக யாகத்தின் பலனை துல்லியமாகப் பெறுவதற்கான நோக்கில் இந்த மந்திரம் சொல்லப்பட்டதாகத் தோன்றினாலும், இதிலிருந்து ஒரு அற்புதமான உண்மை வெளிப்படுகிறது. அதாவது சாதன சதுஷ்ட்டய சம்பத்துகள் என்று அழைக்கப்படுகின்ற விவேகம், வைராக்கியம், சமம் முதலிய ஆறு பண்புகள், முமுக்ஷுத்வம் போன்ற நான்கு தகுதிகளை உடைய சாதகனுக்கு குருவின் அருட்சக்தி பூரணமாய் வேலை செய்து நல்ல பலனைத் தருகிறது என்பதுதான் அது.

பிறப்பில் அமெரிக்கரான ஒரு அன்பர் ஸ்ரீகிருஷ்ணர் மேல் கொண்ட பிரேமையால் கௌடீய

சம்பிரதாயத்தில் தீக்ஷை பெற்றுக் கொண்டு கிருஷ்ண பிரேம் என்ற நாமத்துடன் பகவத் பக்தியை சம்பாதித்துக் கொண்டிருந்தார். முன் செய்த தவப்பயன் உந்தித்தள்ள திருவண்ணாமலையை வந்தடைந்தார். பகவான் ரமணரின் முன்பு வந்து அமர்ந்தார். பகவானின் தவப்பொழிவை மனமாறத் தரிசித்து மகிழ்ந்தார். "சர்வம் வாசுதேவ மயம் ஜகத்" என்று பாவிப்பதால் திருசியமான பிரபஞ்சம் அனைத்தையும் பகவத் ஸ்வரூபம் ஆக்குவது உயர்ந்த மார்க்கமாகும் அல்லவா என்று பகவானிடம் வினவினார்.

பகவான் கூறினார்:

உண்மையே! அதில் சந்தேகமில்லை. ஆனால் காணும் இவை அனைத்தும் வாசுதேவமயம் என்று நினைப்பதற்கு நீ வேண்டும் அல்லவா? நீதானே அவற்றை அவ்வாறு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கூறி மெல்ல புன்னகை செய்தார்.

கிருஷ்ண பக்தரின் அகத்திலுள்ள சிற்சில இருளான பகுதிகளில் வெளிச்சம் படர்ந்தது. நல்ல ஆசான் என்பவர் நாம் சரியாகச் செய்வதைக் கண்டு கொள்ள மாட்டார். மாறாக, நாம் எதைத் தவறவிடுகிறோமோ அதைச் சுட்டிக் காட்டித் திருத்துவார்.

பகவானின் உபதேசம் மேலும் தொடர்ந்தது:

"நீ காணும் எதுவும் உன்னிடம் வந்து தானே வாசுதேவன் என்று சொல்வதில்லையே. அப்படியிருக்க அவைகளை வாசுதேவன் என்று நினைப்பது யார்? நீதானே! நீ ஒருவனே சேதனம் (அறிவு), மற்றபடி இந்த மண், மரம், செடி, கொடி, புல், பூண்டு அனைத்தையும் வாசுதேவமயம் என்று பார்க்கும் நீ உன்னை வாசுதேவன் என்று முதலில் பார்க்க வேண்டும். நிபந்தனை இதுதான். காணும் திருக்கை வாசுதேவனாக மாற்றிவிட்டால் சாட்சிகளாகிய திருசியமும் வாசுதேவமயமாகிவிடும்."

வைகுண்ட லோகத்தின் ஏழு கதவுகளும் ஒரே நேரத்தில் திறந்து கொண்டதுபோல் அந்த அன்பர் உணர்ந்தார். குருவின் சக்தியும், அது வேலை செய்யும் விதமும் வெளியில் தெரியாது. அது முற்றிலும் பரோக்ஷமானது. ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டது. தடுமாற்றம் நிகழும்பொழுது உதவிகள் கிடைக்கும். தவறுகள் நிகழும் சமயத்தில் அவைகள் வெளிச்சமிட்டுக் காட்டப்படும். சாதகன் புரிந்து கொள்வான். தன்னை நெறிப்படுத்திக் கொள்வான். இவ்விதத்தில்தான் குருவின் அருட்சக்தி செயல்படும்.

*"லோகேஸ்மின் த்விவிதா நிஷ்ட்டா புரா ப்ரோக்தா மயானக!*
*ஞானயோகேன ஸாங்க்யானாம் கர்மயோகேன யோகினாம்!!"*

"பாபம் அற்றவனே! இரண்டு நெறிகள் முன்பே என்னால் போதிக்கப்பட்டுள்ளன. சாங்க்யர்களுக்கு ஞானயோகம், யோகிகளுக்கு கர்மயோகம்."

என்று கீதையில் கிருஷ்ணபரமாத்மா கூறுவதுபோல தம்மை நாடிவரும் பக்தர்களின் பக்குவம் அறிந்து அவர்களுக்கு ஞானத்திற்குரிய விசாரத்தையும், அதற்குத் ததிப்படுத்தும் கர்மயோக, பக்தியோக சாதனங்களையும் பகவான் போதித்து அருள்கிறார்.

பகவான் ரமணர் கூறுவதைக் கேட்போம்:

"ஞானமார்க்கத்தில் ஈடுபடுபவர்கள் உபாஸனையை முடித்தவர்கள், உபாஸனையை முடிக்காதவர்கள் என்று இருவகைப்படுவர். உபாஸனையை முடித்தவர்கள் நிரந்தர பக்தியினால் வாஸனைகளைப் பெரும்பாலும் வென்று சித்த சுத்தியையும், ஏதோவோர் வகை அனுபவத்தையும் பெற்றிருப்பார்கள். அத்தகையோர் வாசனைத் தடையற்றிருப்பதால் சத்குரு மூலம் ஆத்ம தத்துவத்தின் நுட்பம் விளக்கப் பெற்றவுடன்

*எளிதான அவ்வனுபவத்தைப் பெறுவர். மற்றவர்களோ உபதேசத்தின் பின்னரும் சாதனை பயின்றாக வேண்டும். அப்பியாச வலிமையால் மனதின் சலனம் சிறுகச் சிறுக ஒடுங்கி காலக்கிரமத்தில் அவர்கள் அவ்வனுபவத்தில் நிலைப்பர்."*

பகவான் யாரிடமும் இதைச் செய், அதைச் செய்யாதே என்று கட்டளைகள் இடுவதில்லை. நிலைமை என்ன என்பதைப் பொதுப்படையாக முன் வைப்பார். பிறகு மேற்கொண்டு யார் யார் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுடைய உள்ளுணர்வு காட்டிக் கொடுத்து விடும்.

பகவான் ரமணரின் அருள் உலகம் மிகவும் விசாலமானது. ஆழமானது. எம்மதத்தவரும் ரமண உணர்வில் லயமாகின்றனர். கொள்கை முரண்பாடுகள் அனைத்தும் இங்கே ஒதுங்கிக் கொள்கின்றன. தெய்வ உணர்வு மேலெழும்புகிறது.

மலர்களில் வந்து அமர்ந்த வண்டுகள் போல அனைத்துத் தரப்பு சாதகர்களும் அவர்களுடைய தேடுதல்கள் முற்றுப் பெற்று மா மௌனத்தில் கரைந்து போகின்றனர்.

அகந்தை இலை பழுத்துக் கீழே விழ வேண்டும். குரு ரமணரின் கண்காணிப்பு ஒன்றே போதும். அதற்குரிய ஏற்பாடுகள் தாமே நிகழ்ந்துவிடும்.

---

# ரமணோதயம்

## Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |
| வஸந்தா ராகவன் | 9445432335 |



# பராபவ சூத்ரம்

## கௌதமன்

### முன்னுரை

ஒருவன் உலக வாழ்க்கையிலும், ஆன்மிக வாழ்க்கையிலும் ஏன் வீழ்ச்சி அடைகிறான் என்பதைக் கண்டறிந்து, பத்திரமாக இரு! என வழிநடத்துவது பராபவ சூத்ரம். இங்கே பட்டியலிட்டுக் கூறப்படும் ஒழுக்கக் கேடுகளும், தவறுகளும் ஒருவனது ஆன்மிக லௌகிக முன்னேற்றத்தில் தடைக் கற்களாக அமைந்துள்ளன. இவற்றால் கட்டுப்படுத்தப்படும் ஒருவன், தன் இயற்கையான நற்பண்புகளை இழந்து விடுகிறான். இந்தத் தடைகளை அறிந்து அவற்றை வெற்றி கொண்டு செல்பவன் ஜயத்தை அடைவான்.

### சூத்ரப் பகுதி

ஒரு சமயம் சிராவத்தி நகரம் அருகே உள்ள ஜேதவனப் பூங்காவில் அநாத பிண்டிகனால் அமைக்கப்பட்ட ஓய்வுச் சோலையில் பகவான் புத்தர் தங்கியிருந்தார். இராப்பொழுது பெரிதும் கழிந்து விட்டது. அப்போது அந்த ஜேதவனம் முழுதும் ஜகத் ஜோதியாய் விளங்கும்படி ஓர் தேவதை அங்கே தோன்றியது. அந்தத் தேவதை பகவான் புத்தரை வணங்கி, “ஐயன்மீர்! கௌதம தேவரே! மனிதனின் வீழ்ச்சிக்கான காரணங்களை எடுத்துக் கூறுவீர்!” என்றது. “உலகில் உயர்வடைபவன் யார்? தாழ்வடைபவன் யார் என்பதை எடுத்துக் கூறுவீர்களாக” என இறைஞ்சியது அத் தேவதை.

புத்தர்: உயர்வடைபவரை எளிதில் அறியலாம். அதுபோன்றே தாழ்வடைபவனையும் எளிதில் அறியலாம். தர்மத்தைப் போற்றுபவன் உயர்வு அடைகிறான். இகழ்பவன் தாழ்வடைகிறான். தர்மத்தை இகழ்தலே வீழ்ச்சியின் முதற்காரணம்.

வீழ்ச்சிக்கு இரண்டாவது காரணம் தீயோர் இணக்கத்தை விரும்புதல். சத்சங்கத்தை விடுத்து, தீயோருடன் சேர்தல், மனப்பாங்கை அழித்து, அழிவுக்கு அடிகோலும். அது முடிவில் அவனது நற்குணங்கள் அனைத்தையும் ஒழித்து பேரழிவுக்குக் காரணம் ஆகிறது.

['சத்சங்கத்தினால் சார்பகலும்' என சத்சங்கத்தின் சிறப்பை பகவான் வலியுறுத்துகின்றார்.]

தூக்கத்தில் பெரிதும் ஆசை கொள்ளுதல், பயனற்ற வெற்றுக் கூட்டங்களில் விருப்பமுடன் பங்கேற்றல், சோம்பலும், முற்கோபமும் ஆகிய இவைகள் ஒருவனது வீழ்ச்சிக்கு மூன்றாவது காரணம்.

[நெடுநீர் மறவி மடிதுயில் இந்நான்கும்
கெடுநீரார் காமக் கடன்.

விரைந்து செய்பவற்றைக் காலம் நீட்டிச் செய்யும் இயல்பும், செய்ய நினைத்தவற்றை மறத்தலும், செய்யாது விடும் சோம்பலும், எந்நேரமும் உறங்கிக் கழித்தலும் ஆகிய இந்நான்கும் தன்னை விரும்பி ஏறினாரை நடுக்கடலில் ஆழ்த்தி விடும் கப்பல்களாகும். திருக்குறள் 605]

தாய்தந்தையரைப் பேணக்கூடிய செல்வமும், ஆற்றலும் இருந்தாலும், அவர்களுடைய வயோதிகப் பருவத்திலே, அவர்களை ஆதரிக்க மறுப்பது - இதுவே ஒருவனது வீழ்ச்சிக்கு நான்காவது காரணம்.

[தன்னைப் பெற்ற தாயின் இறுதிக் காலத்தே, அவரது நெஞ்சின்மீதும் தலைமீதும் தனது திருக்கரங்களை வைத்து, அவரது கர்மபந்தம் அனைத்தையும்

*அழித்து முக்தி அளித்தார் அல்லவா பகவான் ரமணர்! பெற்றோரைப் பேணுதற்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டாம். பக்த விஜயம் கதையிலும், தாய் தந்தையருக்குச் சேவை செய்யும்போது, தன்னை நாடி வந்த விட்டல தேவரையே செங்கல்மீது நிற்க வைத்தான் அல்லவா புண்டரீகன்!]*

*ஒரு அந்தணனை, தபசியை, அறவோனை அல்லது வறியவனை பொய் சொல்லி ஏமாற்றுவது - இது ஒருவனது வீழ்ச்சிக்கு ஐந்தாவது காரணமாகும்.*

*பெருஞ் செல்வமும், அதிகப் பொன்னும், பொருளும் உடையவனாய் இருந்தாலும், அப்போகப் பொருட்களைத் தான் தனியே அனுபவித்தல் இதுவே ஒருவனுடைய வீழ்ச்சிக்கு ஆறாவது காரணம் ஆகும்.*

***[ஏதம் பெருஞ்செல்வம் தான் துவ்வான் தக்கார்க்குஒன்று***
***ஈதல் இயல்பு இலாதான்.***

*தானும் நுகரமாட்டான், தக்கார்க்கு அவர் வேண்டுவனவற்றைத் தரும் இயல்பு இல்லாதவன். அத்தகையவன் தன்னுடைய பெருஞ் செல்வத்திற்குத் தானே கேடாவான். அச் செல்வமும் பயனின்றி அழிந்து போகும். திருக்குறள் 1006]*

*பிறப்பினால், பொருளினால், மரபினால் பெருமை அடைந்த பின்னர், தாழ்நிலையிலுள்ள தன் சுற்றத்தினரை வெறுத்தல். இதுவே ஒருவனது வீழ்ச்சிக்கு ஏழாவது காரணம்.*

*மது அருந்துதல், சூதாடுதல், தான் அரிதில் தேடிய பொருளை வீண் செலவு செய்தல் - இதுவே ஒருவனது வீழ்ச்சிக்கு எட்டாவது காரணமாகும்.*

*தன் மனைவியிடம் திருப்தி அடையாமல் வேசியரோடும், பிறன் மனைவியரோடும் கூடுதல் - இதுவே ஒருவன் வீழ்ச்சிக்கு ஒன்பதாவது காரணமாகும்.*

இளமை நீங்கி முதுமை அடைந்த ஒருவன் இளமங்கை ஒருத்தியை மணந்து அவள்மீது சந்தேகங் கொண்டு, இரவு முழுவதும் தூங்காது விழித்திருத்தல் - இதுவே ஒருவனது வீழ்ச்சிக்கு பத்தாவது காரணமாகும்.

மதுபானம் போன்றவற்றை அருந்தி, வீண் செலவு செய்யும் பகட்டாளியான பெண்ணையோ, ஆணையோ அதிகாரம் கொடுத்துப் பதவியில் அமர்தல் - இது வீழ்ச்சியின் பதினொன்றாவது காரணம்.

அரச குலத்தில் பிறந்திருந்தாலும் கூட பரந்த ஆசையும், குறைந்த செல்வமும் கொண்டு, ஆசைக்கு வீணே அடிமையாகி ஆட்சிக்கு வர விரும்புதல் - இதுவே ஒருவனது வீழ்ச்சிக்கு பன்னிரண்டாவது காரணமாகும்.

இம்மண்ணுலகில் வீழ்ச்சிக்குரிய காரணங்கள் இவையென அறிந்து உள்ளொளியைப் பெருக்கி ஞான சாதனையில் ஈடுபடுபவன் மரணமில்லாப் பெருவாழ்வு எய்துவான் என விடையிறுத்தார் பகவான் புத்தர்.

## ரமணோதயம் காப்பு நிதி

## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு | M.S. ராமமூர்த்தி, சென்னை 28 | 500 |
| திருமதி | C. மகாலட்சுமி, காரைக்குடி | 500 |
| திரு | R. வீரகணேஷ், காரைக்குடி | 500 |

# நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

*பகுதி 20*

*தமிழ் இலக்கியத்தில் 'இன்னா நாற்பது', 'இனியவை நாற்பது' என்ற நூல்கள் உயர்ந்த கருத்துக்களை சொல்கின்றன. ஆன்மிக உலகத்திற்கு ஸ்ரீ ரமண பகவான், இந்த முறையில் ஆக்கித் தந்த நூல் 'உள்ளது நாற்பது' ஆகும். மிகச் சிறந்த தத்துவ உபதேசத்தைத் தரும் இது, உபநிஷத் தத்துவங்களுக்கு ஏற்ப, அக்கருத்துக்களை எளிய தமிழில் நமக்குத் தருகிறது. இதைப் பெற்றுத் தந்த பெருமை ஸ்ரீ முருகனார் அவர்களுக்கே உரித்தானது. 'நான் யார்?' என்ற தத்துவ விசாரத்தில், அகம்பாவம் பெரும் பங்கு வகிக்கிறது. இதை இந்த நூலில் பகவான் தெளிவு படுத்துகிறார்.*

*இந்த அகந்தையைப் 'பேய்' என்று ரமண பகவான் வருணிக்கிறார். பேய் பிடித்துக் கொண்டால், அது தன் விருப்பத்திற்கு ஏற்ப மனிதனை ஆட்டிப் படைத்து அவனை துயரத்தில் ஆழ்த்தி விடும். ஒரு உயிர் அழிந்தால், அதை விடுத்து வேறு ஒரு உயிரைப் பற்றும். ஆனால் என்றைக்கு மனிதன் அதன் உண்மை நிலையை அறியத் தத்துவ விசாரத்தில் ஈடுபடுகிறானோ அப்பொழுதே அந்த அகந்தையாகிய பேய் ஓட்டம் பிடித்துவிடும். சுய உருவம் இல்லாத இதை 'உருவற்ற பேய் அகந்தை' என்று பகவான் வருணிக்கிறார்.*

மனிதனின் கீழ்மையே அகந்தைப் பேய்க்கு உருவம் அளிக்கிறது.

"உருப் பற்றி உண்டாம் உருப்பற்றி நிற்கும்
உருப்பற்றி உண்டு மிகஓங்கும் - உருவிட்டு
உருப்பற்றும் தேடினால் ஓட்டம் பிடிக்கும்
உருவற்ற பேய் அகந்தை ஓர்"

- உள்ளது நாற்பது-25

எளிய சொற்கள். இந்தப் பேயை தேடாதவரை இது 'உருப்பற்றி உண்டு மிக ஓங்கும்'. நம்மையே உண்டு விடும் திறன் படைத்தது. இந்த அகந்தைப் பேய். 'தேடுதல்' என்பதே ஞான விசாரம். பேய் என்பது மனிதனின் பயத்தால், அஞ்ஞானத்தால் எழுவது. அகந்தையைப் பேய் என்றது மிகவும் பொருத்தமானது.

21-ம் நூற்றாண்டில் வாழ்க்கை வசதிகள் பெரிதும் வளர்ந்து செழித்து இருக்கின்றன. மன மகிழ்ச்சிக்குத் தேவையான பல உபகரணங்கள் நம்மிடையே உள்ளன. ஆனால் 'நிம்மதி' என்ற அடிப்படை உணர்வு குறைந்து கொண்டே வருவது கண்கூடு. இது எல்லா வயதினருக்கும் பொருந்தும்.

இதற்கு மேற்சொன்ன பாடல் விளக்கம் அளிக்கிறது. சிற்றின்பத்தையே நாடும்வரை, இந்தப் பேய் 'உருப்பற்றி நிற்கும்', உண்டு மிக ஓங்கும். ஆனால் ஒன்று. பிறவியெடுத்தவன், புலன்கள் மூலம் எய்தும் இன்ப வேட்கையைத் துறந்து, பேரின்பத்தைத் தேடினால், 'ஓட்டம் பிடிக்கும் உருவற்ற பேய் அகந்தை'.

இத்தகைய பேரின்பத்தை நாடுபவனுக்குத் தடையாக இருப்பவை எவை? தேர்த் தட்டில் கண்ணன் இதன் காரணத்தைத் தெளிவாக உரைக்கின்றான். ஆசை, கோபம் எனும் இவ்விரண்டுமே, மனிதனின் எதிரிகள்.

"காம ஏஷ குரோத ஏஷ ரஜோ குண சமுத்பவ:
மஹாசனோ மஹா பாப்மா வித்யேன மிஹவைரிணம்"

- [அத்தியாயம் 3:37]

இவ்விரண்டும் மனிதனின் உள்ளத்தில் பெரும் புயலாக எழுகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்தி, உணர்வுகளை, ஆமை தன் அவயவங்களைக் கூட்டிற்குள்ளே இழுத்துக் கொள்வது போல, மன உறுதி படைத்தவன் அவ்விரண்டையும் தன் கட்டுக்குள் வைத்துக் கொள்கிறான் (கூர்மோங்கானீவ சர்வச:) இந்த ஆசைகளை, நம் முன்னோர் மூன்று வகையாகப் பிரித்தனர். அவையே மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை எனப்படும். மண்ணாசை கொண்ட சர்வாதிகாரிகள் உலகையே ஆட்டிப் படைக்க விரும்பினார்கள். ராவணன் உலகையே வென்றவன். காற்றும், சூரியனும், சந்திரனும்கூட அவன் விரும்பும் வகையில் அவன் நாட்டில் தத்தம் தொழிலைச் செய்து வந்தன. இந்த அகம்பாவத்தை சக்தி பத்ரன் என்னும் வடமொழிக் கவிஞன் அழகுபட எடுத்துச் சொல்லுகிறான், 'ஆஸ்சர்ய சூடாமணி' என்னும் தன்னுடைய நாடகத்தில், அசோகவனத்தில், ராவணன் சீதையைக் கவரத் தன் புகழை பறைசாற்றுகிறார். அவன் கூறும் பாங்கு புதுமையாக அமைக்கப்பட்டுள்ளது.

"நீ தர்மம், நியாயம் என்று எதை எதையோ சொல்கிறாய். இதெல்லாம் பலவீனமானவர்களுக்குத் தக்கது. என்னைப் போன்ற வீரியம் படைத்தவனுக்கு எல்லாமே ஏற்றதுதான். இந்த சந்திரஹாசம் என்ற என் உயர்ந்த கத்தியினால் நான் இந்திர லோகத்தையும் விரும்பினால் வென்று வருவேன், எனக்குத் தடையேதும் இல்லையே!"

"யதி சுரபதகாக்ஷ்ஷா வஜ்ரிணோ வஜ்ரபாதாத் அசிர விக்ருதாரா: சந்த்ரஹாச: சகா மே தவ விரமது தர்ம: சாதனம் துர்பலானாம் பலவத இவ பத்யம் சர்வம் அஸ்மத் விதத்ஸ்வ"

இது அகம்பாவத்தின் உச்ச கட்டம். "தருமம், கோழைகளாலும் பயந்தவர்களாலும், பின்பற்றப்பட

வேண்டிய ஒரு நியதி. (சாதனம் துர்பலானாம்) எனக்கு தருமமே தேவையில்லை” என்பது ஆணவம் பிடித்த ராவணனின் சித்தாந்தம். இவன் மண்ணாசை மட்டுமன்றிப் பெண்ணாசையும் பிடித்து அலைகிறான். இறுதியில் உற்றார், உறவினர், நாடு, புகழ் என அனைத்தையும் இழந்து மாண்டு போகிறான்.

இந்த மண்ணாசையின் பிரதிபிம்பங்களே பதவி ஆசை, புகழாசை போன்றவையாகும். இந்த ஆசைகள் இல்லாத மனிதர்களைப் பார்ப்பது அரிது. ஆனால் இப்பற்றை ஒழித்த மகனீயர்கள் பாரத தேசத்தில் பலர் இருந்தனர். இன்னும் இருக்கின்றனர். சேர நாட்டு மன்னனாகத் திகழ்ந்த குலசேகரப் பெருமான், அரச பதவியில் வெறுப்புற்று, இறைவனின் சேவையிலேயே மனதைச் செலுத்துகிறார். திருவேங்கடமுடையான் சந்நிதியில் சென்று அவர் உளமுருகி “மண்ணரசும் யான் வேண்டேன்” என்று திட சித்தத்துடன் பாடுகிறார். பின் அவர் வேண்டுவது என்ன? அத்திருத்தலத்தில் ஒரு மீனாக, பறவையாக, மரமாக, மலைமுகடாக இப்படி ஏதேனும் ஒன்றாகப் பிறக்க விழைகின்றார். இன்னும் ஒருபடி மேலே சென்று, அந்த ஆலயத்தில் பணிபுரியும் கீழ்நிலை ஊழியனாக இருக்க விழைகின்றார். அவர் பணி விவரணம் (job description) என்னவென்றால் வேங்கடவன் எச்சில் உமிழ ஏதுவாக பொற்கிண்ணம் ஏந்தி அவன் சமீபம் செல்வதுதான். சேரநாட்டு அரசு பதவியை உதறித் தள்ளிய ஆழ்வார் பெருமானுக்குதான் எத்தகைய எளிய பக்தி பாவம்!

“மின் வட்டச் சுடராழி வேங்கடக் கோன் தான் உமிழும்
பொன்வட்டில் பிடித்துடனே புகல்போதல் ஆவேனே.”

மண்ணாசையை முற்றும் துறந்த இவருக்கு மற்ற ஆழ்வார்கள் யாருக்குமே கிடைக்காத ‘பெருமான்’ என்ற பட்டம் கிடைக்கிறது.

அடுத்து வருவது பெண்ணாசை. இது சிற்றின்பத்தின் வெளிப்பாடு. ராவணன் மட்டுமன்றி வேறு பலரும் இதனால் ஈர்க்கப்பட்டவர்களாவர். இந்திரனும், பிரம்மரிஷி என்று பின்னாளில் போற்றப்பட்ட விசுவாமித்திரர் போன்ற மகரிஷிகளும் இந்தச் சபலத்திற்கு ஒரு காலகட்டத்தில் அடிபணிகிறார்கள். இன்றைய காலகட்டத்தில் இது மிகவும் சிந்திக்க வேண்டிய ஒரு விஷயமாகிறது. இந்த உணர்வு, மனிதர்கள் ஆழ்மனத்தில் எப்பொழுதும் குடி கொண்டிருக்கும். இச்சை, என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். இதை மேலெழவொட்டாது தடுத்து நிறுத்தல் சாதகனுக்கு ஒரு பெரும் சவாலாக ஆகிறது. தொன்று தொட்டு இது மனித சமுதாயத்திற்கு ஒரு தடுப்பு சக்தியாக இருப்பது சரித்திர நூல்கள் கூறும் உண்மை.

ஆசையின் மூன்றாம் பரிமாணம் பொன்னாசை. இது மற்ற இரண்டு ஆசைகளிலிருந்து சற்றே வேறுபடுகிறது. பொருள் ஈட்டுதல் என்பது ஒவ்வொரு கிரகஸ்தனுக்கும் விதிக்கப்பட்ட தருமம். தன்னையும், தன்னை அண்டியுள்ளோரையும் காத்தல் அவனது தலையாய கடமையாகிறது. ஆகையினால் அவன் நல்ல முறையில் தொழில் புரிந்து பொருள் சம்பாதித்துத் தன் குடும்பத்தைப் பேணுகிறான். சம்பாதித்த பொருளை தகுந்த முறையில் செலவழித்தும் அதில் ஒரு பகுதியை சேமித்தும் தன் எதிர்கால நலனைக் காக்கிறான். இது பொன்னாசையாகுமா என்ற கேள்வி எழுகிறது.

மண்ணாசையும், பெண்ணாசையும் தீயவை என்று ஒதுக்கினாலும், பொன்னாசையை அப்படிச் சொல்ல இயலாது. நேர்மையான வழியில் ஈட்டி, தகுந்த வழியில் செலவழித்த தனம், தீய ஆசை ஆகாது என்பது தெளிவு. ஆனால் மேன்மேலும் பொருளை அடைய வேண்டும். அதனால் இந்த்ரிய சுகங்களை அதிகமாக

அனுபவிக்க வேண்டும் என்னும் பேராசையே, மனிதனின் அழிவுக்குக் காரணம். "இன்று இதை அடைந்தேன், இந்த இன்பத்தைத் துய்த்தேன். மேலும் மேலும் பொருளை அடைவேன்" என்ற வெறிபிடித்த மனப்பாங்கைக் கண்ணன் சாடுகின்றான்.

"இதம் அத்ய மயாலிப்தம்
இமம் ப்ராப்ஸ்யே மனோரதம்
இதம் அஸ்தீதமபி மே
பஷிஷ்யதி புனர் தனம்"

- (கீதை 16:13)

இந்தப் பொன்னாசையின் காரணமாகவே, இப்பொழுது விரவியிருக்கும் நுகர்வுக் கலாசாரம் (consuzerism) வலிவு பெறுகிறது. வீட்டிலிருந்தபடியே, கணிணியின் மூலமாகப் பொருளைப் பெறும் வாய்ப்பு. இதற்கு மேலும் துணை போகிறது. கவர்ச்சிகரமான விளம்பர உத்திகள் மூலம் தேவையில்லாத ஆடம்பரப் பொருட்களை வாங்கும் தன்மை பெருகி வருகிறது.

இந்த நூற்றாண்டின் வலிமையான சக்தி பொன்னாசையே. இது நேர்மையான பாதையில் செல்ல விரும்பும் மக்களையும் ஆசை என்னும் வலையில் சிக்க வைக்கிறது. பொருள் ஈட்டி பகட்டு வாழ்வு வாழ்பவனே வெற்றி பெற்றவனாகக் கருதப்படுகிறான். பர்த்ருஹரி என்ற கவிஞன் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டு) நீதி சதகம் என்ற நூலில் சொல்லுவான்:

"தனம் படைத்தவனே உயர்ந்தவன். அவனே அறிஞன் சாத்திரம் அறிந்தவன். உயர்குணத்தோன். அவனே பேச்சுத்திறன் உடையவன். அழகு படைத்தவனும் அவனே. ஏனென்றால் எல்லாக் குணங்களும் பணத்தையே அல்லவா தேடி செல்கின்றன."

கிட்டத்தட்ட 1300 ஆண்டுகளுக்கு முன்பே இந்நிலையென்றால், இக்காலத்தில் பணத்தின் சக்தி மேலும் வலிவுடையதாகின்றது. இயற்கையே

விலைவாசியேற்றம், அன்றாடம் அதிகரிக்கும் தேவைகள். இவற்றால் அவதியுறும் சாதாரண குடும்பஸ்தனின் கால அட்டவணையில் "பிரம்மத்தை நாடுதல்" என்ற செயல் துர்லபமாகி விடுகிறது.

ஆசைதான் மனிதனை உயர்ந்த ஒழுக்க நெறியிலிருந்து தடுத்து, உலக இன்ப இச்சைகளில் ஈடுபடுத்துகிறது என்பது உபநிஷதங்களும் கீதையும் வற்புறுத்தும் நியதி. இதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது குறித்து தத்துவ நூல்கள் பல்வேறு முறையில் விளக்கம் தருகின்றன. தனித்து இருந்து, மனதை ஒன்றுபடுத்தி தியானத்தில் ஈடுபடுவது ஒரு வழி. (ஏகாதசி, யத சித்தாத்மா - கீதை-6.10). பரம்பொருளில் ஈடுபாடு உடைய சாதகர்கள் ஒன்றுகூடி அவன் புகழ்பாடி, பரஸ்பரம் அந்த லயிப்பில் மனதை முழுவதும் செலுத்தி, அந்தப் பேரின்பப் பேராற்றில் மூழ்குதல் வேறு ஒரு வழியாகும்.

"மச்சித்தா: மத்கத ப்ராணா:
போதயந்த: பரஸ்பரம்
கதயந்தஸ்ச மாம்நித்யம்
துஷ்யந்தி ச ரமந்தி ச"

- (கீதை 19.9)

இது இக்காலகட்டத்திற்கு ஏற்புடைய நிலை. சற்றே சுலபமானது. மனதைக் கட்டுப்படுத்தித் தனிமையில் இருத்தல் உயர்ந்த பயிற்சியென்றாலும் அது அனைவருக்கும் சாத்தியம் அன்று 'கூடியிருந்து குளிர்ந்தேலோ' என்று ஆண்டாலும் அருளிச் செய்கின்றாள். இதற்கு அவள் கூறும் மற்றொரு மார்க்கம், 'வாயினால் பாடி மனதினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவா நின்றனவும் தீயினால் தூசாகும்' என்பதாகும். மனமும் செயலும் அவனிடமே லயிக்க வேண்டும். பின்னர் மோட்சப் பேறும் அடைய இயலும். இதுவே பக்தி மார்க்கம்.

கீதையில் கர்மயோகம், ஞானயோகம், தியான யோகம், பக்தி யோகம் என்று பல அத்தியாயங்களில், கண்ணன், உயர்நிலையை அடைய பல்வேறு உத்திகளைக் காட்டுகிறான். பேரின்ப மார்க்கப் படிக்கட்டில் பல்வேறு நிலைகளில் இருக்கும் மாந்தர்களுக்கு, அவரவர் நிலைக்குத் தகுந்த பாதையை வகுத்துத் தருகிறான் கீதாசாரியன். ஆனால் இதற்கு ஒரு அடிப்படைத் தகுதியையும் அடியார்முன் வைக்கின்றான். “நீயே உன்னை உயர்த்திக் கொள்ள முயல வேண்டும். அதற்கு மாறாக உன்னைத் தாழ்த்திக் கொள்ளாதே” இந்த உந்து சக்தி இருந்தால் ஆன்மிக வாழ்வில் மேல்நிலையை அடைய இயலும்.

இன்றைய தலைமுறை, பொருளைத் தேடி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. இதன் விளைவாக இளம் வயதிலேயே ரத்த அழுத்தம், மன இறுக்கம் போன்ற நோய்களுக்கு உள்ளாகி மன நிம்மதியை இழந்து கொண்டிருக்கிறது. விவாகரத்துக்களும் முதியோர் இல்லங்களும் அதிகரித்து வருவது சமுதாய சீர்கேட்டின் முக்கிய அடையாளங்கள்.

முன்னர் குறிப்பிட்ட கீதையின் வார்த்தைகள் மறுபடியும் சிந்திக்கத்தக்கவை. “உன்னையே உயர்த்திக் கொள்” (உத்தரேத் ஆத்மனாத்மானம்) உற்று நோக்கத்தக்கது. எதனால் உயர்த்திக் கொள்ள இயலும் என்பதற்கு கடோபநிஷதம் வழிகாட்டுகிறது. பரப்பிரம்மத்தை நாடுதல் (ச்ரேய:) என்றும் உலக இன்பத்தை நாடுதல் (ப்ரேய:) என்றும் கூறப்படுகிறது. முன்னதை நாடுபவன் உயர்ந்தோன் ஆகிறான். பின்னதையே தேடுபவன் தன் லட்சியத்திலிருந்து விழுந்து துன்பத்தை அடைகிறான்.

“அன்யஸ்ரேயோன்யது தைவ ப்ரேய: தே
உபே நானார்த்தே புருஷம் சினித:

*தயோ: ஸ்ரேய ஆததானஸ்ய சாதுர்பவதி*
*ஹீயதே அர்த்தாத்ய உ ப்ரேயோ வ்ருணீதே"*

*- (கடோபநிஷத் 2.1)*

ஸ்ரேயஸைத் தேடுபவன் அந்த நிலையில் ஏதோ ஒரு தொழிலில் அல்லது சேவையில் இருந்து கொண்டே பிரம்மத்தை அவன் தொழிலில் வெற்றி பெற்று பொருளும் ஈட்டலாம். ஆனால் அவன் நாட்டமெல்லாம் வேறு உயர்ந்த ஒரு இலக்கை நோக்கி இருக்கிறது. அதனால் அவன் தினசரி வாழ்வின் வெற்றி தோல்விகளால் பாதிக்கப்படுவதில்லை. மனதில் நிம்மதியும் வாழ்வில் பிடிப்பும் உடையவனாக நல்வாழ்வு வாழ்கின்றான். (சாது:பவதி). இந்திரியங்களினால் பெறும் சுகத்தை நாடுபவன் உணர்வுகளால் ஆளப்படுகிறான். இன்ப துன்ப இருமைகள் அவனை எப்பொழுதும் தாக்குகின்றன. வாழ்வு பயனற்றுப் போகிறது. தற்கொலை எண்ணங்கள் எழுகின்றன. மன அழுத்தத்தைப் போக்க அவன் Anti-depressants என்கிறவகை மருந்துகளை நாடுகிறான். அவன் தேடி அலையும் இன்ப உலகம் அவனால் அடையப்படுவதில்லை. லட்சியங்கள் கை நழுவிப் போகின்றன. (அர்த்தாத் ஹீயதே).

இந்தக் கருத்துக்கள் தொழிலில் ஓய்வு பெற்று, அமைதியை நாடும் வயதானவர்கள் மட்டுமல்ல, இளம் வயதில் ஓடி ஆடி வேலையில் முழு ஈடுபாட்டுடன் செயலாற்றும் இளைஞர்களும் ஏற்கக் கூடியவை. இத்தகைய மாந்தர்கள் "ச்ரேயஸை" பின்பற்றி பேரின்பப்பேற்றை இக வாழ்வில் பெற இயலும் அல்லது இந்திரிய சுகங்களில் நாட்டம் கொண்டு அமைதி இழந்து வாழ நேரிடும். திருவாசகம் இதை அழகாக வருணிக்கிறது.

*"மத்துஉறு தண் தயிரின் புலன்*
*தீக் கதுவக் கலங்கி"*

புலன்கள் என்கின்ற தீ பற்றி எரிக்கின்ற ஜீவன், மத்தினால் கடையப்பட்ட தயிர் போலக் கலங்குகின்றான். இதற்கு மருந்து செஞ்சந்தனம் அணிந்த அந்த மெய்ப்பொருளே என்று திருவாதவூரில் அவதரித்த மாணிக்கவாசகப் பெருமான் ஆதரவு கொடுக்கிறார்.

சம்சாரக் கடலில் தவித்து, புலன்கள் கலங்கித் தவிக்கும் மாந்தருக்கு பிரம்ம வேட்கை மிக மிக அத்தியாவசியத் தேவையாகிறது. ரமண பகவான் சொன்னபடி அகந்தைப் பேயை ஓட்டுவதே இதற்கு உற்ற வழி.

# இனிவரும் திருநாட்கள் - 2015

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 6 | செவ்வாய் | ஸ்ரீ பகவானது 135ஆவது ஜயந்தி |
| | 15 | வியாழன் | பொங்கல் |
| பிப்ரவரி | 3 | செவ்வாய் | சின்னஸ்வாமிகள் ஆராதனை |
| | 17 | செவ்வாய் | மகா சிவராத்திரி |
| மார்ச் | 10 | செவ்வாய் | சுந்தரம் ஐயர் தினம் |
| | 20 | வெள்ளி | ஸ்ரீவித்யா ஹோமம் |
| | 21 | சனி | தெலுங்கு வருடப் பிறப்பு |
| | 28 | சனி | ஸ்ரீராம நவமி |
| ஏப்ரல் | 14 | செவ்வாய் | தமிழ் வருடப் பிறப்பு |
| | 16 | வியாழன் | ஸ்ரீபகவானது 65ஆவது ஆராதனை |

மேற்கண்ட விழா நிகழ்வுகளின் மாற்றங்களை அறிய ஆச்ரம இணையதளம் www.sriramanamaharshi.org பார்க்கவும்

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

## 'ஓஷோ' ரஜனீஷ்

*(அவரது பல்வேறு நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டது)*

*ஸ்ரீ ரமணர் ஒரு பண்டிதரல்ல. ஏனெனில் அவர் சிறு வயதிலேயே வீட்டை விட்டு நீங்கினார். மீண்டும் சாமான்ய வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. அவர் தனது மெய்யான இல்லத்தை (தான் என்னும் உணர்வை) அறிந்தார். உண்மையான வீட்டை அடைந்த பின்னர் யார்தான் சாமான்ய வீட்டிற்குத் திரும்ப விரும்புவர்? அவர் காட்டும் வழி நேரான ஒன்று. 'நான் யார்' என்ற தேடுதல் மூலம் உனது உள்ளத்தின் மையத்தினைச் சார்வாய் ஆழ்ந்த ஞான உணர்வின் ஸ்தாபகர் ஸ்ரீரமணர் என்றே கூறலாம்.*

*ஒரு மிகச் சிறிய கையடக்கமான 'நான் யார்' என்ற நூலின் வழியாக ஒரு மிகப்பெரிய உண்மையினை, மிக உயரிய மார்க்கத்தினை ரமணர் உணர்த்தினார். பெரும்பாலும் மௌனத்தில் ஆழ்ந்திருந்த ரமணரின் மோன உபதேசமே மெய்யான வழி. கலீல் கிப்ரான் மஹரிஷி ரமணரைச் சந்தித்திருந்தால் மிக்க ஆன்மிகப் பயன் பெற்றிருப்பார். அப்போது இந்த உலக குருவின் குரலை அவர் கேட்டிருப்பார்.*

*—"நான் விரும்பும் நூல்கள்: 11ஆம் பகுதி"*

*எப்படி ரமண மஹரிஷிக்கு சிறுவயதிலேயே திடீரென ஆன்மிக எழுச்சி ஏற்பட்டது? எங்ஙனம் அச்சிறுவனது தனித்துவம் மறைந்து, அவன் பிரபஞ்ச மெய்யுணர்வு பெற்றான்? அச்சிறுவன் ஓர் இறப்புச்*

செய்தியைக் கேட்டான். ‘நான் இறப்பு என்பது எது என்பதைக் கண்டுணர்வேன்’ என்று முடிவுசெய்து கொண்ட அச்சிறுவன், தன் உள்தேடுதலில் உடனடியாக ஆழ்ந்தான். இது ஓர் ஆன்மிகத் தேடல் என்ற எண்ணம்கூட அவனுக்கு இல்லை. தனது அறையிலேயே படுத்துக்கொண்டு, மிகத் தீவிரமான உந்துதலுடன் தனது உள்ளே அவன் ஆழ்ந்தான். தனது உடலே இறந்துவிட்டது என்று அவன் பாவித்துக் கொண்டான். அந்த இறப்புணர்விலேயே அவன் தீவிரமாக மூழ்கினான். உடனே, ஒரு ஞானக் கதவு படீரெனத் திறந்தது. காலத்தையும் இடத்தையும் கடந்த ஒரு பூரணம் அவனை அணைத்துக் கொண்டது. நமது அனைவரும் வாழ்விலும் அதிஷ்டானமாக அடித்தளமாக அமைந்துள்ள, அனைத்திற்கும் ஆதாரமான பூர்ண பிரக்ஞையில் அவன் கரைந்து விட்டான். அந்த இறப்பு நாடகத்திலிருந்து அவன் கண் விழித்தபோது அவன் மிகவும் மாறுபட்ட ஒரு வடிவமாக எழுந்தான்.

அவனுக்குள் என்ன நிகழ்ந்தது? இதுவரை எந்தவிதமான சாதனையும் அவன் செய்ததில்லை. எந்த விதத்திலும் அவன் தனிப்பட்டுத் திகழ்ந்ததில்லை. அவனிடமிருந்து குறிப்பிட்ட ஒன்று என்னவெனில் அவனது மிக ஆழ்ந்த உறக்கம்தான். அவனை உறக்கத்திலிருந்து எழுப்புவது மிகக் கடினமான காரியம். அவனை அடித்தாலும், உதைத்தாலும் அவன் எழுந்திருக்க மாட்டான். இதையே அச்சிறுவனது தனிச் சிறப்பாகக் கூறலாம். ஏனெனில் ஆழ்ந்த உறக்கம் என்பது சமாதியின் வாயிற் கதவு. அதன் வழியாக நாம் ஆத்ம லோகத்தில் பிரவேசிக்கலாம் (எனக்கும் இப்படிப்பட்ட ஆழ்ந்த உறக்கம் ஏற்படும்).

— (ஓர் உத்தம ஆசான், பகுதி 1, அத்யாயம் 3)

ரமண மகரிஷி கூறுகிறார்: ஆத்ம ஞானம் என்பது மிக எளிதாகப் பெறக்கூடிய ஒன்று.



'ஓஷோ' ரஜனீஷ்

ஏனெனில் அதை எங்கேயும் தேடிச் செல்ல வேண்டியதில்லை. அது உன்னிடத்திலேயே உள்ளது. எப்போதும் இருந்துகொண்டே இருப்பது. நீ செய்ய வேண்டியதெல்லாம் வெளியே நோக்குவதை விட்டு உள்ளே திரும்பி நோக்க வேண்டியது ஒன்றுதான். அந்த திரும்பி நோக்கிலேயே நீ ஆத்மஞானம் பெறுகிறாய். நீ உடனே ஒரு பிச்சைக்காரன் என்ற நிலையிலிருந்து சக்கரவர்த்தி என்ற நிலைக்கு உயர்கிறாய். ஆத்ம சிம்மாசனத்தில் அமர்ந்து ஞான சாம்ராஜ்யத்தை ஆளத் துவங்குகிறாய். நீ செய்ய வேண்டியதெல்லாம் திரும்பி அகந்தனைக் காண வேண்டியதுதான். அதுவே ஆத்ம ஞானத்தின் திறவுகோல்.

சூஃபிகள் காட்டிய வழியும் இதுவே. இம்மானுவேல் காண்ட் போன்ற மேலைத் தத்துவ அறிஞர்களும்

*ஆத்மிக அறிவு மிகச் சிரமப்பட்டு அடைய வேண்டிய ஒன்று என்று கூறியபோது ரமண மகரிஷி அது மிகவும் எளிதில் அடையக் கூடியது என்று அறிவுறுத்தினார். அவர் அதனைத் தனது அனுபவத்திலேயே அறிந்தார் அல்லவா?*

*— "ஓர் உத்தம ஆசான்; பகுதி 1, அத்தியாயம் 1"*

ஸ்ரீ ரமண மகரிஷி வாழ்வின் இறுதி நொடிகள். புற்றுநோய் அவரது உடலை அரித்து விட்டது. அத்தருணத்திலும், ரமணர் தன் அருட்பார்வையுடன் புன்முறுவல் பூத்தார். அவர் தேகம் தீவிரமான வாதனையை அனுபவித்திருக்கும். ஆயினும் அவர் வதனம் புன்முறுவலுடன் விகசித்தது. அழுதுகொண்டு இருந்த பக்தர்களைப் பார்த்து அவர் கூறினார்: "ஏன் அழுகிறீர்கள்? போவதற்கு என்று ஒன்றும் இல்லை. நான் எங்கே உங்களை விட்டுப் போகப் போகிறேன்? நான் இங்கேதான் தொடர்ந்து இருப்பேன். இந்தத் தேகம் மண்ணோடு மண்ணாகலாம். ஆனால் நான் எங்குமே செல்ல மாட்டேன். இப்போது எப்படி இந்த அகிலத்தின் பேரலையாய் இருக்கிறேனோ அப்படியே தொடர்ந்து இருப்பேன். நான் உங்களை விட்டுப் பிரிந்து விடுவேன் என்பது உங்களது தவறான எண்ணத்தால் உண்டாவது. நான் எப்போதும் இப்போது போலவே இருப்பேன்."

ஒரு ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் இடையே உள்ள வேறுபாட்டை உங்களால் காண முடிகிறதா? இந்தத் தேகம் என்பது ஒரு அஞ்ஞானிக்கு அவனுக்கும் பூர்ண ப்ரக்ஞைக்கும் இடையே உள்ள தடைச்சுவராக உள்ளது. ஒரு ஞானிக்கோ அது அவனையும் பூர்ணத்துவத்தையும் இணைக்கும் பாலம்.

*— (வெள்ளை ரோஜா, அத்தியாயம் 1)*

ரமண மகரிஷி கூறிய நேர்வழி இதுவே. உண்மையான தியானம் என்பது ஒன்றே ஒன்றுதான். மௌனமாக

அமர்ந்து 'நான் யார்' என்று வினவுங்கால் முதலில் மனதின் மேல்மட்டத்தில் எழும் இவ்வினா, தொடர்ந்து விசாரித்து வர, அம்புபோல் உள்நோக்கி நம் மூலத்தை நோக்கிச் செல்கிறது. அந்த வினா இதயத்தின் ஆழத்தில் ஓர் உணர்வாக மாறுகிறது. இந்த விசாரணையைத் தொடருங்கள். ஒருநாள் இந்த உணர்வும் முற்றிலும் மறைகிறது. நீங்கள் வினாவையும், விடையும் கடந்த மெய்யுணர்வாக பரிணாமம் அடைகின்றீர்கள். 'நான் யார்' என்னும் இந்தக் கேள்வி, உங்கட்கு எழும் எல்லாக் கேள்விகளையுமே அழிக்க வல்லது. வினாவே அற்ற பரவெளியை நீங்கள் அடைகின்றீர்கள். அதுவே உங்களது தேடுதலின் விடையுமாகும். அந்த விளக்கத்தை நீங்கள் அறிந்தபின்னர், உங்களால் யாருக்குமே அதைச் சொல்லால் விளக்க முடியாது. அது வினாவையும், விடையையும் கடந்த நிலை.

— (வெள்ளை ரோஜா, அத்தியாயம் 4)

ரமண மகரிஷியிடம் ஒருவர் "நான் முழு மௌனம் என்ற நிலையில் என்னைப் பூரணமாக அறிய எதைப் பயில வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு ரமண மகரிஷியின் விடையாவது: "ஆத்மாவை அறிய நீ எதையும் புதிதாகக் கற்க வேண்டியதில்லை. உண்மையில் இதுவரை நீ கற்றதை எல்லாம் விட்டு விடவேண்டும். உன்னையே நீ பயில்வாய்" என்றாராம்.

இதுவரை நீ கற்றதெல்லாவற்றையும் மறந்து விடு. உனது புத்திசாலித்தனம், சாதுர்யம் எல்லாவற்றையும் துறந்து, ஒரு குழந்தை போன்ற தன்மையுடனும், நம்பிக்கையுடனும் உள்நோக்கிச் செல். உன்னைத் தவிர வேறு ஒன்றுமே இப்பிரபஞ்சத்தில் இல்லை. எனவே ஒரு திறந்த இதயத்துடன் ஞானத்தை வரவேற்பாய். இதுவே உண்மையான சிரத்தை உண்மையான அறிதல்

— (வெள்ளை ரோஜா, அத்தியாயம் 10)

*ரமண மஹரிஷி உடலைப் புற்றுநோய் விழுங்கிக் கொண்டு இருந்தது. அதிலிருந்து விடுபட வழியே இல்லை. அவரைக் குணப்படுத்த பல மருத்துவ நிபுணர்கள் வந்தனர். அவர்களுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. அவர்கட்குப் புரியாத நிகழ்ச்சியைக் கண்டனர். மஹரிஷியின் தேகத்தில் தாங்க முடியாத வலி அனுபவம் இருந்திருக்கும். ஆயினும் அவர் விழிகளில் அதற்கான அறிகுறியே இல்லை. அவை எப்போதும்போல பரம சாந்தக் கடலாகவே ஒளிர்ந்து கொண்டு இருந்தன. ஏனெனில் அவ்விழிகள் அவரது ஆத்மாவையே நோக்கிக்கொண்டு இருந்தன. "காண்பது அந்தமில்லாக் கண்" அல்லவா?*

*அவரை மருத்துவர்கள் கேட்டனர்: "பகவானே, உங்களுக்கு வலியே இல்லையா?" ரமண மகரிஷி விடையிறுத்தார்: "வலி இங்கே உள்ளது என்பது உண்மைதான். ஆனால் அவ்வலி என்னால் அனுபவிக்கப் படுவதில்லை. என் உடலில் வலி உள்ளது என்பதை நான் அறிவேன். ஆனால் அதை நான் ஒரு சாட்சியாகவே நோக்கிக்கொண்டு இருக்கிறேன். அதனால் எனக்கு ஒரு பாதிப்பும் இல்லை."*

*பலருக்கு எழும் கேள்வி இது. பகவான் போன்ற பரம ஞானிக்கு எப்படி இந்தக் கொடுநோய் வந்தது?" ஒரு ஞானிக்கு ஏற்படும் துன்பங்களும், மகிழ்ச்சியும் அவரது உடலுக்கே ஏற்படுபவை. அவை அவர் ஆத்ம சாட்சாத்காரம் அடைவதற்கு முன் துலங்கிய கர்ம பலன்களின் தொடர்ச்சியே. ஒரு கனவில் விதைக்கப்பட்ட விதைகள் கனவிலேயே வளர்ந்து பழம் கொடுக்கலாம். நான் விழித்து எழுந்தபின் இவை கனவுக் கனிகள் என்றே உணர்கிறேன். நான் கனவிலேயே தொடர்ந்து இருந்தால் அந்தக் கனிகளை அறுவடை செய்து, அதன் விதைகளை அடுத்த பயிர்வரை விதைத்து இருப்பேன். விழித்தெழுந்துவிட்ட*

நானோ இந்தப் பயனற்ற செயலில் ஈடுபட மாட்டேன் அல்லவா? அந்தக் கனவுக் கனிகள் பழுத்து உதிர்ந்து விட்டன. அவற்றுடன் எனக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. அதுபோன்றே, ஞானிக்கு ஏற்படும் இன்ப, துன்பங்களும் பழைய கர்ம பலன்களின் தொடர்ச்சி என்றும், அவற்றுடன் உண்மையான தனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை என உணர்ந்து உள்ளான்.

ஒருவர் வந்து ரமணர் பாதங்களில் புஷ்பங்களைச் சமர்ப்பிக்கும்போதும், அவர் பற்றற்குக் காண்கிறார். அந்த பக்தனின் நல்கருமங்களே அவனைத் தன் பாதங்களில் புஷ்பங்களை சமர்ப்பிக்க வைக்கின்றன. அவற்றை பகவான் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டால் அந்த பக்தனுக்கு ஒரு புதிய கர்ம வினைக்கான ஆரம்பம் நிகழும். அதே சமயம் 'இப்படிச் செய்ய வேண்டாம்' என்று அவர் மறுக்கவும் இல்லை. அப்படி அவர் மறுத்தால், அது பகவானிடம் ஒரு எதிர்மறையான தர்மத்தின் தொடக்கத்தை ஏற்படுத்தும். எனவே இந்த ஏற்பு மற்றும் மறுப்பு இரண்டுமே செயல் தொடக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அதை ஏற்கவும் இல்லை; மறுக்கவும் இல்லை.

அவர் எப்பொழுதும் அசைவற்று சாட்சியாக வீற்றிருந்தார்.

— (வெள்ளை ரோஜா, அத்தியாயம் 3)

ரமணோதயம் மின் இதழைக் கீழ்க்கண்ட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

www.ramanalayam.org

# ரமணரைக் கண்டோமென கும்மியடி!

ரமண ராஜசேகர்

*கும்மியடி! பெண்ணே கும்மியடி!*
*கும்பிட்டு ரமணரை! கும்மியடி!*
*நம்மை விட்டினி துன்பங்கள் போயின!*
*நலங் கண்டோமென கும்மியடி!* (கும்மியடி)

*ஆலயம் பலவும் சுற்றிவந்து விட்டோம்!*
*ஆண்டவன் கண்களில் காணலியே!*
*மாயவன், பிரம்மனும் காணமுடியாத -*
*மாயவன் ரமணராய் வந்தாரடி!* (கும்மியடி)

*நம்மைச் சுற்றியுள்ள காட்சிகளெல்லாம் -*
*நாளும் மாறுகின்ற மாயமடி!*
*உண்மை உள்ளத்திலே காணுமென்றுரைத்த -*
*உத்தமரை எண்ணிக் கும்மியடி!* (கும்மியடி)

*தன்னை அறிந்திட தானும் மறைந்திட*
*தெரியுது ஆத்மாவே! கும்மியடி!*
*உன்னை அறிந்தபின் உலகமே நீயென்று*
*உணர்த்தியதை யெண்ணிக் கும்மியடி!* (கும்மியடி)

*ஆணவம் அழிந்திட ஆழ்மனம் தெரியுது!*
*ஆத்ம விசாரமிது கும்மியடி!*
*“நானார்” அறிந்திட நம்மை உணர்ந்திட*
*நாளும் ‘ஆனந்தமே’ கும்மியடி!* (கும்மியடி)

# பகவான் ரமணர் கண்ட தமிழ் வேதாந்த நூல்கள்

பகவான் ரமணர் எந்தத் தத்துவ நூலையும் படிக்காமலேயே தமது 17ஆவது வயதில் இறைவனை உணர்ந்தறிந்த பெரியார் ஆவர். இத்தகையவரை இவை இல்லாமலேயே இவர்க்குக் கிடைத்தது வியப்பிலும் வியப்பாகும். இது முந்தைய பல பிறவிகளில் அவர் ஆன்மிகத்தில் பெருவளர்ச்சி பெற்று வளர்ந்து இப்பிறவியில் விட்ட குறையை நிறைவேற்றியிருக்க வேண்டும் என்பதையே காட்டுகிறது.

பகவான் திருவண்ணாமலை சேர்ந்த பிறகு கிடைத்த தத்துவ நூல்களை எல்லாம் படித்து எளிதில் மனத்திலே பதித்துக் கொண்டார். தாம் பல ஆண்டுகளுக்கு முன்பு படித்த நூல்களை அப்படியே தெளிவுடன் சொல்ல வல்லவராகவும் திகழ்ந்தார். அவர் தம் அன்பர்களுடன் பேசுகையில் குறிப்பிட்ட 5, 6 தமிழ் வேதாந்த நூல்களைக் குறித்த சில கருத்துகளை மட்டும் இங்கே சுருக்கிக் காட்ட எண்ணியுள்ளேன். இதற்கு மேலும் சில நூல்களை அவர் படித்திருக்கக் கூடும். ஆயினும் பெயர் குறிப்பிட்டுச் சொன்ன நூல்களை மட்டுமே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம்.

முதலில் நாம் கருதத் தக்கவை தத்துவராய சுவாமிகள் இயற்றிய நூல்களேயாவன. இந்த மேதை சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டில் தோன்றி 18 வேதாந்த நூல்களை இயற்றினார். அப்பொழுது அத்துவிதங் குறித்த நூல்கள் எல்லாம் வடமொழியிலேயே அமைந்திருந்த காரணத்தால்

*தமிழர்களுக்கு அவற்றால் பயன் முழுமையாகக் கிடைக்கவில்லை. தத்துவராயரின் நூல்கள் இந்த நெடுநாள் தேவையைச் சிறப்பாக நிறைவேற்றித் தந்தன.*

*தத்துவராயர் இயற்றிய நூல்களுக்குள் மோகவதைப் பரணி என்பது பெரிதும் புகழ் பெற்றது. பரணி என்பது ஓர் அரசன் பகைவர்களைத் தோற்கடித்தபின் அவனைச் சிறப்பிக்கப் பாடப்படுவது. வழக்கமாக ஆயிரம் யானைகளைக் போர்முனையில் கொன்ற வாளைச் சிறப்பிக்கவே பாடப்படும் இந்தப் பிரபந்த வகையைத் தத்துவராயர் தனது வேதாந்த குருவைக் குறித்துப் பாடப் பயன்படுத்தினார். அக்காலத்துப் புலவர் பெருமக்கள் இக்காரணத்தைக் காட்டி “வீரம் என்பதையே அறியாத உம் ஆசானைக் குறித்துப் பரணி பாடலாமா?” என்று கேட்டுத் தம் ஆட்சேபத்தைத் தெரிவித்தனர்.*

*தத்துவராயர் இதற்கு ஏதும் விடைகூறாது புலவர் குழாத்தைத் தம் ஞானாசாரியரிடம் அழைத்துச் சென்று அவரிடம் அவர்கள் கண்ட குறையைத் தெரிவித்தார். குரு இதற்கு ஏதும் கூறாது மௌனமாக இருக்க, வந்தவர்கள் அங்கேயே அமர்ந்து பேச்சற்று இருந்தனர். 3, 4 நாட்கள் சென்றன; அங்குள்ள ஒருவரும் எந்தச் சிந்தனையும் இல்லாது எழுந்து செல்லும் நோக்கமும் இல்லாமல் அப்படியே அங்கு கல்லாகச் சமைந்திருந்தனர்.*

*நான்காம் நாள் குரு தன் மனத்தில் சங்கற்பம் செய்து கொண்டதும் வந்தவர்கள் தமது இயல்பான வாழ்க்கை, எண்ணச் சுழல், இவற்றைத் திரும்பப் பெற்றனர். பெற்றதும், “யானைகளை அடக்குவது அரிய செயலே அல்ல! நம் போல்வாரின் புயல்வீசும் மனத்தை நான்கு நாட்கள் முழுமையாக அடக்கி ஆண்டார், இந்த ஞானாசிரியர். இவர்க்குப் பரணி பாடுவதே சாலப் பொருத்தமுடையது!” என்று பாராட்டிச் சென்றனர்.*

இக்கதையைப் பகவான் ரமணர் ராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஒருவருக்கு எடுத்துச்சொல்லி ஞானியின் தன்மையை விளக்கினார்.

தத்துவராயர் வழங்கும் அரிய கருத்துகளில் சிலவற்றை இங்குச் சுருக்கமாக ஆராய்வோம். மோகவதைப் பரணியின் ஒரு பகுதியாகிய சசிவன்ன போதத்தின் தொடக்கத்திலேயே

புராணம் இதிகாசம் எவையும் பொருளனைத்தின்
பிராணன் அறியாதுள இடத்தில் அவை பிதற்றே

என்று உறுதியாகக் கூறிப் பொருளனைத்தின் பிராணனாகிய இறைவனை, பிரம்மத்தை அறிவதே கல்வியின் நோக்கமாக அமைய வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார். மோகப்படையினை விவேகிகள் வென்றபின் களத்தில் விழுந்திருந்த உடல்களைக் கூழாகக் காய்ச்சி உண்ண வந்த பேய்கள்

போக்கும் வரவும் அறுத்த கழல் போற்றிப் போதக்கூழ் உண்டு
வாக்கும் மனனும் இறந்து இடத்தே வாளா இருக்க வாரீரே

என்றும்

ஆக்கை அறுத்துக் கரணங்கள் அறுத்துச் சீவபரம் அறுத்து
வாக்கை அறுத்து ஆனந்தக் கூமுண்ண வாரீர், வாரீரே.

என்றும் கூறுவதாகப் பாடி வேதாந்த அப்பியாசத்தின் இறுதி நிலையை விளக்கமுறக் காட்டுவார். இறுதியில்,

இல்லறம் துறவு என்றிலை வேண்டினார்
யாவரேனும் வருக என்றிடுவதே
நல்லறமென யாவர்க்கும் நல்கினார்
நாதர் வெல்களக் கூமுண்ண நங்கியே

என்ற பாட்டில், சமூகத்திலே நாம் காணும் பல வேறுபாடுகள், நிலைகள், இல்லறம், துறவறம் என்ற பாகுபாடுகள் முக்கியமானவை அல்ல என்று காட்டி

"வேண்டினார் யாவரேனும் வருக" என்ற பேதமற்ற வேதாந்த மார்க்கத்தின் சிறப்பை உணர்த்திச் சென்றார்.

தமிழ் வேதாந்த நூல்களுள் எல்லாம் தலைமை பெற்று விளங்குவது தாண்டவராயர் இயற்றிய கைவல்லிய நவநீதமேயாகும். இந்தியாவில் எந்த நூலாசிரியரின் காலத்தையும் அறிவது கடினம்; நமக்குச் சரித்திர உணர்வு இல்லை என்று மேல்நாட்டினர் குற்றம் கூறுவது உண்மையாகும். தாண்டவராயர் வாழ்ந்தது 300 ஆண்டுகளுக்கு முன்பாக என்று உறுதியாகக் கூறமுடியும். அவர் வேதாந்தம் கற்போருக்கு விளங்கும்படி அதன் கொள்கைகளைப் படிப்படியாகப் பாடப்புத்தகத்தில் கூறுவதுபோல் இயற்றித் தந்திருப்பதால் மற்ற எல்லா நூல்களையும் விட இதுவே எல்லோராலும் விரும்பிப் படிக்கப் பெறுகிறது. பகவான் இதிலிருந்து பல கருத்துகளை எடுத்து விளக்கம் தந்திருக்கிறார்.

கைவல்லிய நவநீதத்தின் சிறப்புக்கு ஒரு காரணம் உண்டு. தத்துவராயர் சிறந்த அறிவாளி, தத்துவமேதை என்பதில் ஐயம் ஏதும் இல்லை. ஆனால் அவர் சிக்கலான வேதாந்த சாத்திரத்தை வெளிப்படுத்தப் பரணி, உலா, பிள்ளைத்தமிழ், தூது என்ற பிரபந்த வகைகளைப் பயன்படுத்தியுள்ளார். இதனால் நூலுக்கு இலக்கியச் சுவை ஏற்படுகிறது என்பது உண்மையே. ஆனால் நேரடியாகப் பாட புத்தகத்தைப் போல் சாத்திரத்தைப் புகட்டுவதால் கிடைக்கும் தெளிவு முந்தைய வகையில் கிடைப்பதில்லை. இந்த நூல்களை ஒப்பிட்டுப் படிப்போர்க்கு இது புலனாகும்.

கைவல்லிய நவநீதத்திலிருந்து சில பாடல்களை இங்கு ஆராய்வோம். முதற்கண் அத்துவித சாத்திரத்துக்கு அடிப்படைக் கருத்துகளில் ஒன்றாக சாத்திரத்துக்கு அடிப்படைக் கருத்துகளில் ஒன்றாக அத்தியாரோபம் என்பதை எளிய முறையில் விளக்குவார், இவ்வாசிரியர்:

ஆரோபம் அத்தியாசம் கற்பனை ஆவ எல்லாம்
ஒரோர் வஸ்து வினைவேறே ஒரோர் வஸ்து என ஓர்தல்
நாரூரு பணியாத் தோன்றல் நானாகத் தறியில் தோன்றா
நீரூரு கானல் தோன்றல் நிரந்தரம் வெளியில் தோன்றல்
ஆரோபம், அத்தியாசம் கற்பனை ஆவஎல்லாம்
ஒரோர் வஸ்து வினைவேறே ஒரோர் வஸ்து என ஓர்தல்
நாரூடு பணியாத் தோன்றல் நானாகத் தறியில் தோன்றா
நீரூடு கானல் தோன்றல் நிரந்தரம் வெளியில் தோன்றல்
நீரூடு கானல் தோன்றல் நிரந்தரம் வெளியில் தோன்றல்

ஆரோபம், அத்தியாசம் என்பவை எல்லாம் ஒரு பொருளை வேறொரு பொருளாக அறிதலேயாம். உதாரணமாக, பழுதையில் பாம்பைக் காணுதல், கட்டையில் மனிதன் தோன்றுதல், கானலில் நீர் இருப்பதுபோல் தோன்றுதல் என்பனவற்றைக் கூறலாம். சுத்த சைதன்னியத்தில் இவ்வுலகும் மனிதர்கள் எல்லோரும் விலங்குகள், புல் பூண்டுகளும் தோன்றுதற்கு இவை உதாரணங்கள் ஆக அத்துவிதத்தில் காட்டப்பெறுவன. அடுத்தபாட்டில் “அப்பிரமத்தில் தோன்றும், ஐம்பூத விகாரமெல்லாம் செப்பிய கற்பிதத்தால் செனித்த என்றறிந்து கொள்ளே” என்று இதனைத் தெளிவாக்குவார்.

ஞானியின் இயல்பு கூறுகையில் கற்பனை வந்தவாறு காட்டினோம் காண்ப எல்லாம் சொப்பனம் போல எண்ணித் துணிந்தவன் ஞானி ஆவான் என்று தெளிவாக்குவார். அபவாத இலக்கணம் கூறுகையில்,

அரவன்று கயிறுஎன்றாற் போல்
ஆள்அன்று தறியென்றாற் போல்
குரவன்சொல் உபதே சத்தால்
கூறுநூல் ஒளியைக் கொண்டு
புரமன்று புவன மன்று
பூதங்கள் அன்று ஞானத்
திரம்என்னும் பிரமம் என்றும்
தெளிவதே அபவாதம் காண்.

தத்வமஸி என்ற புகழ் பெற்ற மகாவாக்கியத்துக்கும் பொருள் கூறும் பாடல் இங்கு நினைக்கத்தக்கது.

பூச்சிய ஈசன் சீவன்
புகல்பதம் இரண்டி னுக்கும்
வாச்சியம் லட்சியம் தான்
மலமிலாப் பிரமம் ஆன்மா
காச்சிய பாலில் நெய்போல்
கலந்துஒன்றாங் கடைந்தெ டுக்கும்
ஆச்சியம் என்ன உன்னை
அறிந்துநீ பிறிந்து கொள்ளே.

என்ற பாடலில் தத் என்ற பதமும் துவம் என்றதும் தருகின்ற வாச்சியார்த்தமானவை, ஆரோபமான சீவ, ஈசுவரராம். இலக்கியார்த்தமானது மலம் ஏதும் இலாத பிரம்மமாகும். இவ்விலக்கியார்த்தமான கூடஸ்த பிரம்ம அதிஷ்டானத்தை ஒன்றாகக் காணின் அதுவே அசிபதார்த்தமான சுத்த சைதன்னியமாம் என்று இப்பாட்டில் தெளிவாக்குகிறார்.

பிரம்மமாகிய அதிஷ்டானத்தை உலகம், சீவர்கள், ஈசன் ஆகிய ஆரோபிதங்களாக அறியும் அக்ஞானம் நீங்கி ஞானம் பெறும் வழியை ஒரு பாட்டில் விளக்குவார், ஞானாசிரியர்.

இந்த ஞானந்தான் வருவதுஎப்படி
எனில் இடைவிடா விசாரத்தால்
வந்து அடைந்திடும் விசாரந்தான்
ஏதுஎனின் மனோதியாம் சரீரத்தில்
இந்த நானெவன் சித்துஎது
சடம்எது இரண்டும் ஒன்றாகக் கூடும்
பந்தம் ஏதுவீடு ஏதுஎன
உசாவுதல் பகர்விசாரம் அதாகும்.

ஞானம் விசாரத்தாலேயே அடையப்பெறுவது; விசாரம் என்பது, "நான் யார்?" சித்து என்பது எது? சடம் என்பது எது? எதனைப் பந்தம் என்கிறோம்? எது

வீடு?" என்று நம்மையே கேட்டுக்கேட்டு அறிதலாகும். அத்துவித சாத்திரத்தின் அடிப்படையான செய்முறையை எத்துணை எளிதாகக் காட்டி விட்டார் ஞானகுரு, இப்பாட்டில்!

தொடரும்

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2015

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 04 | ஞாயிறு | காலை 10.05 | 05 | திங்கள் | காலை 10.52 |
| பிப்ரவரி | 03 | செவ்வாய் | அதிகாலை 3.38 | 04 | புதன் | அதிகாலை 5.21 |
| மார்ச் | 04 | புதன் | இரவு 10.01 | 05 | வியாழன் | நள்ளிரவு 12.24 |
| ஏப்ரல் | 03 | வெள்ளி | மாலை 4.20 | 04 | சனி | மாலை 6.09 |
| மே | 03 | ஞாயிறு | காலை 8.31 | 04 | திங்கள் | காலை 9.28 |
| ஜூன் | 01 | திங்கள் | இரவு 10.16 | 02 | செவ்வாய் | இரவு 10.17 |
| ஜூலை | 01 | புதன் | காலை 9.35 | 02 | வியாழன் | காலை 8.36 |
| | 30 | வியாழன் | மாலை 6.59 | 31 | வெள்ளி | மாலை 5.15 |
| ஆகஸ்ட் | 29 | சனி | அதிகாலை 3.27 | 30 | ஞாயிறு | அதிகாலை 1.11 |
| செப்டம்பர் | 27 | ஞாயிறு | காலை 11.35 | 28 | திங்கள் | காலை 9.09 |
| அக்டோபர் | 26 | திங்கள் | இரவு 8.29 | 27 | செவ்வாய் | மாலை 6.12 |
| நவம்பர் | 25 | புதன் | காலை 6.42 | 26 | வியாழன் | அதிகாலை 4.19 |
| டிசம்பர் | 24 | வியாழன் | மாலை 6.28 | 25 | வெள்ளி | மாலை 5.19 |

# ஸ்ரீ ரமணரின் பொன்மொழிகள்

உலகத்தில் நாம் எதையும் ஒரு பெயரை வைத்தோ உருவத்தைக் கொடுத்தோதான் நினைவில் வைத்துக் கொள்கிறோம். கடவுளை நினைத்துத் தியானம் செய்வதற்கும் இப்படி ஒரு வழி முறை தேவைப்படுகிறது.

வெளியே பார்த்ததும், பேசியும் பழகியும், உணர்ந்தே பழக்கப்பட்ட மனத்தை உள்முகமாகத் திருப்புவது என்பது சாதாரண காரியமல்ல. அப்படிச் செய்வதற்கு இப்படி ஒரு படிக்கட்டு அவசியமாகிறது.

எல்லா உணவுகளுக்குமே ஒவ்வொரு வகையான பாதிப்பு உண்டு. சில உணவு வகைகள் அமைதியைத் தருகின்றன. வேறு வகை உணவுகள் மந்த நிலையையும், தூக்கத்தையும் உண்டு பண்ணுகின்றன. உணர்ச்சியைத் தூண்டும் மாமிச வகையைச் சார்ந்த ராஜஸ உணவையும், மந்தநிலையையும், சோம்பலையும் தூண்டும் தாமஸ உணவையும், நாம் தவிர்க்க வேண்டும். அமைதியைத் தரும் சாத்வீக உணவே தியானத்துக்கு ஏற்றது.

பிராணயாமப் பயிற்சி முடிந்ததும் பழைய நிலைக்குத் திரும்பிவிடும். ஆனால் யோகிகள் படிப்படியாக, இப்படி ஒரு பயிற்சி இல்லாமலே நிரந்தரமாக அமைதியுடன் இருக்கும் நிலையை அடைய விரும்புவார்கள். அதைத்தான் சகஜ சமாதி என்று குறிப்பிடுகிறோம்.

மூச்சு என்பது குதிரையைப் போன்றது. மனம் என்பது அதன் மீது சவாரி செய்து குதிரையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சவாரி செய்பவனும் கட்டுப்படுகிறான். இதுவே பிராணயாமம். மூச்சின் இலக்கத்தைக் கவனித்துக் கட்டுப்படுத்துவதன் மூலம் மனத்தில் ஓடும் நினைவுகளும் கட்டுப்படுகின்றன.

# நீங்கள் என்ன தனிநபரா?

நண்பர்: தன் முனைப்பு இல்லாத பொதுவான செயல் எது?

கிருஷ்ணமூர்த்தி: முதலில், செயல் என்றால் என்ன? 'செயல்' என்ற சொல்லிற்கு என்ன அர்த்தம் கொள்கிறீர்கள்? ஒரு மாதிரி வழிமுறையின்படியோ, ஒரு கருத்தின்படியோ, கடந்த கால அனுபவங்களின்படியோ, எதிர்கால இலக்குகள், இலட்சியங்களின்படியோ அல்லது உங்கள் சௌகரியப்படியோ, நீங்கள் செயல்படுகிறீர்கள் என்பதால் 'செயல்' என்ற சொல்லிற்கு நீங்கள் தரும் பொருள் என்ன? 'செயல்' என்ற சொல், செயல்படுவதைக் குறிக்கிறது; செயல்பட்டதையோ, செயல்படப் போவதையோ குறிக்கவில்லை. 'செயல்' எனப்படுவது இக்கணத்தில் நிகழ்காலத்தில் செயல்படுவதாகும். அந்தச் செயல், சரியானதா, உண்மையானதா என்பதெல்லாம் உங்கள் சிந்தனையின் தன்மையை மற்றும் உங்கள் இதயத்தின் தன்மையைப் பொறுத்தே இருக்குமே தவிர, ஒரு சூத்திரத்தைப் பொறுத்து இருக்காது. எனவே, செயல் என்றால் என்ன என்பதை முதலில் விசாரணை செய்யுங்கள். காலையிலிருந்து இரவு வரை, நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இங்கு அமர்ந்து கொண்டு, பேச்சாளர் பேசுகிறார் - நீங்கள் அங்கிருந்து கொண்டு கேட்கிறீர்கள் - இதுவும் செயல்தான். நீங்கள் கவனமாகக் கேட்பது, ஒரு செயல் - அப்படிக் கவனிக்கா விட்டாலும், அதுவும் ஒரு செயலே. உண்மையிலேயே பேச்சாளரின் பேச்சைக் கவனித்துக் கேட்பதும், அவ்வாறில்லாமல், கேட்பதாக நினைத்துக்கொண்டு கேட்காமல் இருந்தாலும், பேச்சை செவிமடுப்பது என்பது ஒரு செயல்.


J. கிருஷ்ணமூர்த்தி

'தன் முனைப்பு இல்லாத' (impersonal) என்று எந்த அர்த்தத்தில் சொல்கிறீர்கள்? 'தான்' என்பதற்கு என்ன அர்த்தம்? 'தான்' என்ன பெயரா, வடிவமைப்பா? நீங்கள் 'தான்' என்று அழைத்துக் கொள்வதற்கு, நீங்கள் என்ன தனிநபரா? உங்களை தனிநபராகக் கருதிக் கொள்வதால், பொதுவான செயலைப் பற்றி வினவுகிறீர்களா? நீங்கள் அனைவருமே உங்களைத் தனிநபராகத் தான் எண்ணிக் கொள்கிறீர்கள் என்று நான் அறிவேன். உங்கள் பாரம்பரியம் மற்றும் சமயம், உங்களைத் தனிநபர் என்றே சொல்கிறது. நீங்கள் என்ன தனிநபரா? பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடரும் மனித குலத்தின் பெருமுயற்சியின் விளைவாக அல்லவா நீங்கள் இருக்கிறீர்கள்? இம்மாதிரியான கேள்விகளை எழுப்ப நீங்கள் விரும்புவதில்லை. அம்மாதிரியான கேள்விகளைக் கண்டு நீங்கள் பயப்படுகிறீர்கள். நீங்கள் தனிநபர் என்றில்லாவிட்டால், உங்களுக்கு என்ன நேரிடும்? தனித் தன்மை என்பது மற்றதிலிருந்து ஒதுங்கி தனித்து இருப்பதாகும். தனிநபராக எண்ணிக் கொள்வதால்தான், மற்றவரின் கழுத்தை நெரிப்பதையே வாழ்நாள் முழுவதும் செய்து கொண்டிருக்கிறோம். மற்றவர் மீது நமக்கு அன்பு இல்லை. கடவுளின் கருணை பற்றிப் பேசுகிறோம். ஆனால், நம் ஒருவரையொருவர் நேசிப்பதில்லை. மற்றும், மனிதனின் கண்டுபிடிப்பு தான் கடவுள். நீங்கள் எல்லோரும் கடவுள் நம்பிக்கை

உடையவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், அந்தக் கடவுளைப் படைத்தவர்கள் நீங்கள்தான். கடவுள் என்றொருவர் இருந்து, அவர்தான் நம்மைப் படைத்தார் என்றால், என்ன பரிதாபகரமான கடவுளாக அவர் இருக்க வேண்டும்! அவ்வகையில் எண்ணிப்பார்க்க நீங்கள் விரும்பவில்லை. ஒரு மாயத் தோற்றத்தை வழிபடுகிறீர்கள் - அந்த மாயத் தோற்றம் உங்களுக்கு விருப்பமானதாக இருக்கிறது. அதில் பாதுகாப்பு இருப்பதாகக் கருதுகிறீர்கள். மாயத் தோற்றம், பாதுகாப்பு அளிப்பதில்லை என்று கண்டுகொள்கிறீர்கள். உங்கள் கடவுள் உங்களை வஞ்சித்து விட்டார். இருப்பினும், அவரை நீங்கள் வழிபடுகிறீர்கள். கிருத்துவ கடவுள், ஹிந்து கடவுள், முஸ்லீம் கடவுள் - இவையெல்லாம் அர்த்தமற்ற சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது.

எனவே, நம் இருளைப் போக்கும் ஒளியாக, நமக்கு நாமே ஒளிர முடியுமா என்பதை ஆராயலாம். உள் முகமாக, உளரீதியாக, யாரையும் சார்ந்திராமல் - வாழ்க்கைத் துணைவரையோ, குருவையோ, புனித நூலையோ - எதையும் சார்ந்திராமல் நம்மால் வாழமுடியுமா என்று விசாரணை செய்யலாம். சுதந்திரமான, திறமிக்க, துடிப்பான வாழ்க்கை வாழுதல் சாத்தியம் தானா என்று பார்க்கலாம். துடிப்பான வாழ்க்கையில் மூளை, இயந்திரத்தனமாக இயங்குவதில்லை. தயவுசெய்து, பழகிப்போன இந்தப் பழைய வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்டு, முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கை முறையில் வாழ்வது கூடுமா என்று ஆய்வு செய்வோம்.

புதுதில்லி

*30.10.1982*

- நன்றி: 'வசந்தம்' இதழ்

# உள்ளே பாருமே - அது போதுமே

சு. பரமேஸ்வரன்

இறைவனைப் பற்றி நம் முன்னோர்கள் எவ்வளவு உயரிய சிந்தனைகளால் பாடிப் பரவசப்பட்டனர் என்பதை பலரும் எண்ணிப் பார்ப்பதில்லை. ஐயன் திருவள்ளுவர் "வேண்டுதல் வேண்டாமை இலான்" என்று குறிப்பிடுகிறார். அமலன், விமலன், நிர்மலன் என்ற வார்த்தைகளை எல்லாம் பொருள் உணர்ந்து பார்த்தால், இறைவனின் மேன்மையை உணர முடியும். இறைவன் மனிதனிடம் எவ்விதபேரமும் பேசுவதில்லை. எதற்கெடுத்தாலும் நான்-என்னுடையது என்று சொல்லும் மனிதன் தனக்கு வேண்டிய யாவற்றையும் வெளியிலிருந்தே பெறுகிறான். உலகில் உள்ள யாவும் இறைவனால் படைக்கப்பட்டதென்றால், நாம் எந்தப் பொருளை இறைவனுக்கு சமர்ப்பிக்க இயலும்?

இறைவழிபாடு என்று அபிஷேக ஆராதனை, சந்தனக் காப்பு, பூச்சொறிதல் யாவும் வழிபாட்டின் ஒரு அம்சம்தான். கோயில் வழிபாடு என்பது வர்த்தக ரீதியில் சென்றது மட்டுமல்ல, தரம் தாழ்ந்து சிறு தெய்வ வழிபாடும் மூட நம்பிக்கையும் அதிகரித்து வருவது கண்கூடு. "ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று சாற்றிடும் அறிவிலிகாள்" என்று பாரதி சாடினான். பலரும் சாடி என்ன பயன்? மக்கள் மனதில் மாற்றம் நிகழவே இல்லை.

*வழிபாட்டின் பயன்:*

*மனம் வளர்வதிற்குரிய உயர் வழிபாட்டு நெறி வளர்ந்தால் அமைதி தழுவிய வாழ்க்கை மலரும். அலைகின்ற மனத்தை ஒருமைப்படுத்துதல் வழிபாட்டின் முதற்படி. "ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை" என்பார் நாவுக்கரசர், "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்" என்பார் வள்ளலார்.*

*உருவ வழிபாடு என்றால் என்ன? திருக்கோயில்களில் உள்ள மூர்த்திகளைக் கும்பிடுவது மட்டும் தானா? அது சரியான பார்வையல்ல. சுற்றியுள்ள நண்பர், உறவினர், பகைவர் என்று இருப்பது எல்லாம் உருவம்தான். அவர்களை நேசிப்பதே வழிபாடாகும்.*

*"பாரிலுயர்ந்தது பக்தி - அதைப்*
*பற்றின பேர்க்கே வரும் முக்தி*
*சீரிலுயரட்டசித்தி - யார்க்குஞ்*
*சித்திக்குமே சிவன் செயலினால் பக்தி"*

*- கடுவெளி சித்தர்*

*பக்தி என்பது ஒருவித மன விருத்தி. உணர்ச்சியின் வேகம் எனலாம். இது யார் யார் மேல் உண்டாகிறதோ அவரவர் பெயர்களில் அது கூறப்படுகிறது. நண்பர்களிடம் காட்டுவது நட்பு. பெண்களிடம் காட்டுவது காதல். குடும்பத்தாரிடம் காட்டுவது பாசம்-அன்பு. இறைவனிடம், குருவிடம் காட்டுவது பக்தி. மகான்கள் நம்மிடம் காட்டுவது கருணை-அருள் எனலாம். தன் மனத்தையும், புத்தியையும் பகவானிடம் அர்ப்பணித்து சதா சர்வகாலமும் அவரையே நினைத்து இருப்பது பக்தி. யார் எதை சதா சிந்தித்துக் கொண்டிருக்கிறாரோ அவர் அதுவாக ஆகிறார் என்பது இயற்கை நியதி. ஈசனை எண்ணி பக்தி செய்பவன் ஈசனாகிறான். பாசனை செய்து வாழ்பவன் பாசாண்டியாகிறான். பக்தி செய்தால் பண்பு வருகிறதா?*

என்றால், உண்மை பக்தி செய்தால் பண்பைப் பெற இயலும். சதா அங்கும் இங்கும் அலையும் பேய்க் குரங்கு மனதால் நிலையாக, உறுதியாக பகவானையே சிந்திக்க முடியுமா? என்றால் அது முடியாதுதான். ஆனால் நம் மனதை அடக்கும் ஆற்றல் பகவானிடம் உள்ளது. அதனால்தான் "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்றார் மாணிக்கவாசகர்.

பக்தி செய்ய என்ன வேண்டும்? பணம், இடம், காலம் எதுவும் தேவையில்லை. பண்டிதனும், பாமரனும், கோடீஸ்வரனும், கோவணாண்டியும் பக்தி செய்யலாம். சரி பக்தி செய்தால் என்ன கிடைக்கும்? யாரும் லாபத்தில்தானே குறியாக இருப்பர். கிடைப்பது பற்றி பிறகு பார்ப்போம். நம்மிடம் உள்ளது போய் விடும். அகம் போய் விடும். அப்படியென்றால், மனத்தாலே, வாக்காலே, காயத்தாலே செய்த, செய்யப் போகிற பாவங்கள் எல்லாம் போய்விடும். பணவெறி, பெண் வெறி பிடித்த, பித்துப் பிடித்த மனிதருக்கு ஒரு மருந்துண்டு.

"பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குது -
பேரின்பமங்குள்ளே"

இந்த மருந்தை யார் தயார் செய்தது? ஞானிகள் தவம் செய்து உண்டாக்கிய மருந்து.

பித்தம் தெளிய மருந்து நம்முள்ளேயே இருக்கிறது.

அகத்திய மாமுனிவர் இலட்சக்கணக்கான பாடல்களில் மருத்துவக் குறிப்புகள், மந்திரம், மாந்திரீகம், மருத்துவம், சோதிடம், யோகம், ஞானம் பற்றி அரிய கருத்துக்களை அருளியுள்ளார்கள். அதில் "அந்தரங்க தீட்சா விதி" என்ற நூலில் உள்ள ஒரு பாடல் நமது கவனத்தைக் கவருகிறது.

"பூசை நெறியறியாமல் ஆண் பெண் இரண்டும்
பொல்லாத மாயை வலைதனில் பட்டு

*ஆசை கொண்டு மோக மதில் அறிவு கெட்டு*
*அங்கமென்ற சங்கதியை அறியாமல் தான்*
*பாச மென்ற பலருசியால் மனதை முந்தி*
*பரகதியை அறியாமல் மாண்டார் கோடி*
*ஓசை என்ற சப்தம் உதித்தடங்கும் வீட்டை*
*உத்தமனே மனக் கண்ணால் நித்தம் பாரே”*

*- அகத்தியர்*

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதிய பாடல். இன்றைய மனிதரின் மன நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. விளக்கம் தேவையில்லை. கடைசி இரண்டு வரிகளே நம் கவனத்தைக் கவர்கிறது. அண்டம் பிண்டம் இரண்டிலும் ஒரு வித நுண் ஒலி உள்ளது. அது நமது புறக்காதுகளுக்கு எட்டாதது. யோக நூல்கள் அதை “அனாகத சப்தம்” எனக் குறிப்பிடும். மனம் ஒன்றிய நிலையில் தவம் செய்தால் உணர முடியும். அகத்தியர் இதை மறை மொழியாக, பூடகமாகவே குறிப்பிட்டு உள்ளார்கள். இது அந்தரங்க தீட்சா விதியல்லவா?

**காவியகண்ட கணபதி முனிவருக்கு அருளிய உபதேசம்:**

காவிய கண்ட கணபதி முனி என்பவர் வடமொழியில் சிறந்த புலமை பெற்றவர். வேதம், மந்திர சாஸ்திரம் எல்லாம் நன்கு கற்றவர். தேசியவாதி, ஒப்பற்ற காந்தியவாதி. இவர் 1907இல் சில காலம் திருவண்ணாமலையில் தங்கியிருந்தார். ஒரு தினம் மிகுந்த மனக் குழப்பத்துடன் விருபாட்ச குகைக்குச் சென்று ரமணர் முன் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து, கண்ணீர் மல்க, பகவானே, நான் எல்லா சாஸ்திரங்களையும் படித்தறிந்தேன். மந்திர ஜபங்கள், பூசனைகள் செய்தபோதிலும் மனதில் அமைதி ஏற்படவில்லை. தவம் என்றால் என்னவென்று புரியவில்லை. உண்மையான தபஸ் என்றால் என்ன? என்பதை தனக்கு உபதேசிக்குமாறு மனம் கசிந்து வேண்டினார். சற்று நேரம் மௌனமாக இருந்த பகவான் கூறுவார்.

"ஒரு மந்திரம் ஜபம் பண்ணினால் அந்த மந்திரத்வனி (சப்தம்) எங்கிருந்து எழுகிறது என்று கவனித்தால், மனம் அங்கே லீனமாகும். அதுவே தபஸ். 'நான் - நான்' என்பது எங்கேயிருந்து புறப்படுகிறது என்று கவனித்தால் மனம் அங்கே லீனமாகும். அதுவே தபஸ் எனப்படும்" என திருவாய் மலர்ந்தார்.

அகத்தியர் மறை பொருளாகச் சொல்லியதை, ரமண பகவான் நமக்கு செயல்முறை விளக்கம் அல்லவா வழங்கியுள்ளார். முருகனார் சுவாமியின் வேண்டுகோளுக்கு ஏற்ப ரமண பகவான் அருளிய நூல் உபதேசசாரம். தாருகவன முனிவர்களுக்குச் சிவபெருமான் அளித்த உபதேசமே உபதேச உந்தியார். உபதேச சாரத்தில் கண்டிருப்பது என்ன? நிஷ்காமிய கர்மம், பக்தி, யோகம், ஞானம் எனப் படிப்படியாக உபதேசிக்கிறார்.

உதித்த இடத்தில் ஒடுங்கியிருத்தல்
அது கன்மம், பக்தியும் உந்தீபற
அதுவே யோகமும், ஞானமும் உந்தீபற
- உபதேச உந்தியார், பாடல் 10

சிந்தித்துப் பாருங்கள்! தாருக முனிவர்களுக்கும் நமக்கும் அப்படி என்ன வித்தியாசம்? அவர்களும் காமிய கர்மத்தில் ஈடுபட்டிருந்தார்கள். நாமும் நம் ஆசைகள் நிறைவேற வழிபாடு செய்கிறோம். அவர்கள் மந்திரங்கள் உச்சரித்தார்கள். நாம் விஞ்ஞானத்தை உபயோகிக்கிறோம். அவர்கள் கடவுளை மறந்தார்கள். நாம் கடவுளின் பெயரால் நமது ஆசைகளையே வழிபடுகிறோம். அவர்கள் யாகங்கள் செய்தார்கள். நாமோ இயற்கைச் செல்வங்களை சூறையாடுகிறோம். பகவானின் உபதேசம் வாழ்க்கையின் குறிக்கோளையே மறந்து நிலை தடுமாறி நிற்கும் நம் ஒவ்வொருவருக்குமே தேவை என்று சொல்லவும் வேண்டுமோ?

"மருந்து வேண்டில் இவை, மந்திரங்கள் இவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை"

என்ற ஞானசம்பந்தரது தேவாரப் பாடல் இங்கு சிந்திக்கத்தக்கது.

பக்தி, யோகம், ஞானம் பற்றியெல்லாம் ஆயிரக் கணக்கான விளக்கவுரைகள் உண்டு. தமது பேச்சுத் திறத்தால் அழகாகப் பேசுபவர்களும் உண்டு. இவற்றை யெல்லாம் படிப்பதாலோ, கேட்பதாலோ பயன் ஒன்றும் இல்லை.

அறிவு நிலையில் மனிதன் அறிந்து கொள்கிறான். அனுபவ நிலையில் தன்னுள் பெரிய மாற்றத்தைக் காண்கிறான். இதற்கு இடையில் இருப்பது முயற்சி - பயிற்சி - விடாமுயற்சி.

நமக்கு வேண்டியது பகவானின் ஒரு மொழியே. அது ஒரு மாஸ்டர் சாவி போன்று எல்லாப் பூட்டுக்களையும் திறக்கும் வல்லமை பெற்றது என்ற உறுதிப்பாடு வேண்டும். ஆழ்ந்த நம்பிக்கையோடு முயற்சி, பயிற்சி செய்தால் - முயற்சி என்பது விடா ஆ ஆ ஆ முயற்சியாக தொடர்ச்சியாக இருந்தால், அதுவே, முயற்சியற்ற அந்த உயர்ந்த நிலைக்கு நம்மை இட்டுச் சென்று குருவருள் சித்திக்கும் - நம்புங்கள்.

"ஒருமொழியே பல மொழிக்கும் இடம் கொடுக்கும் - அந்த
ஒருமொழியே மலம் ஒழிக்கும், ஒழிக்கும் என மொழிந்த
குருமொழியே மலை இலக்கு - மற்ற மொழி எல்லாம்
கோடு இன்றி வட்டு ஆடல் கொள்வது கண்டாய்"

- தாயுமானவர்

நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் கடவுள் பதினாறு அடி எடுத்து வைக்கிறார் என்று சொல்கிறார்கள். இறைவன் - குரு நமக்குத் தொலைவில் இல்லை. நம்முள்ளே இருக்கிறார். நாம் முயற்சி செய்தால், விரைவில் நமக்கு

*அருள் புரிவார் என்பதை அறிவுறுத்தவே கூறியுள்ளார்கள். உண்மையில் இந்தப் பயணம் அறிவுப்பூர்வமான செயல் முறையிலான புனிதப் பயணமாகும்.*

*உறுதியான நம்பிக்கையும், ஆழ்ந்த பக்தியும், மனித முயற்சியும் இல்லாமல் எந்த அருளையும் பெற இயலாது. எல்லோரும் மேற்கொள்ள வேண்டிய முறை ஒன்றே. பக்தி-சிரத்தை-தெளிவு-குருமொழி மீது ஆழ்ந்த நம்பிக்கை.*

*"எத்தொழிலை செய்தாலும் ஏதவத்தைப்*
*பட்டாலும் முத்தர்மனமிருக்கும் மோனத்தே"*

*என்றதுபோல, நாம் பகவானிடம் மனதை வைத்து, அனைத்து செயல்களையும் பக்தியுடன் செய்வோம்.*

*பாலரமணரின் உள்ளத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய பெரிய புராண சிவனடியார்கள் வரலாறு வாழ்ந்து காட்டுவதற்குரியது. இதன் பயனாய் உண்மையான பக்தி, அன்பு, திருத்தொண்டு வளர வேண்டும்.*

*"மானாபிமானம் விட்டுத் தானாகி, தற்பரமாய்*
*நின்றவர்க்கு சேனாதிபதி போலே ஞானாதிபதியுண்டு*
*பாருமே - கட்டிக் காருமே - உள்ளம் சேருமே - அது*
*போதுமே"*

*மூர்த்தி எல்லாம் வாழி எங்கள் ரமணமோன குருவாழி*

*அருள் வார்த்தை என்றும் வாழி - அன்பர்களும் வாழி வாழியவே!*


## ரமணோதயம் சந்தா விவரம்

**ஆண்டு சந்தா:** ₹ 75 **தனி பிரதி:** ₹ 20
**ஆயுள் சந்தா:** ₹ 1500 **5 ஆண்டு:** ₹ 350

# கேள்வி-பதில்

கேள்வி: தியானம் செய்யத் தொடங்கி வெகுநாட்கள் அப்பியாசம் செய்தபின் மனதில் எந்த எண்ணமும் தோன்றாமல் சாந்தி நிலை ஏற்படுகிறது. இப்படி இருக்கும்போது, சில நாட்கள் நடுநடுவே தியானம் கலைகிற மாதிரி எண்ணங்கள் தோன்றுகின்றன. இப்படி இருப்பதால் தியானம் செய்தது வீண், அந்த முயற்சி தோல்விதான் என்றுதானே கருத வேண்டும்?

- கோமதி சங்கரநாராயணன், மதுரை

பதில்: இந்தத் தியானம் வீண் என்று நினைப்பதே தவறாகும். நடுநடுவே தியானம் கலைந்தால் பெரிய நஷ்டம் என்று நினைத்துவிட வேண்டாம். எண்ணங்கள் தோன்றுவது மனித இயல்பு. தியானம் கூடுவது பழகிய பின்னரும் சில நாட்கள் அது கலையும்படி எண்ணங்கள் தோன்றலாம். அவற்றை முன்புபோல் “எங்கிருந்து வருகின்றன. இந்த எண்ணங்கள்?” என்று ஆராய்ந்தால் அவை ஒடுங்கிவிடும். மிகப் பெரியவர்களுக்கெல்லாம் இப்படித் தியானம் அவ்வப்போது கலைவதுண்டு. வாழ்க்கை முழுவதும் தியானம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றி காணாது இறந்தவர்க்கும் இந்த முயற்சி நஷ்டமேயில்லை என்பான் கீதாசாரியன். கீதை ஆறாம் அத்தியாயத்தில் இப்படி இறப்பவர்கள் அடுத்த பிறவியில் தியானத்தைத் தொடர்ந்து செய்து வெற்றி பெறக்கூடிய நல்ல சூழ்நிலை கிடைக்கும். தூயவர் வீட்டில் பிறந்து, விட்ட இடத்தில் தொடர்ந்து தியானம் செய்து நற்கதி அடைவார்கள் என்று தெளிவாகக் கூறப்படுகிறது. நல்லது செய்வோர்க்கு என்றும் நன்மையே. அவர்கள் துர்க்கதியை அடைய மாட்டார்கள் என்றும் கண்ணன் உறுதி கூறுகிறார்.



# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### ஸ்ரீ ரமணாச்ரமம், கார்த்திகை தீபம்

*“.......பகவான் பக்தர்களைக் கருணைமிகுந்த நோக்கால் பார்த்தவாறே அருகிருந்தவர்களுக்கு மலையுச்சியில் தீபம் ஏற்றுமிடத்தைச் சுட்டிக்காட்டித் தீபதரிசன தத்துவத்தை விளக்கினார்.*

*வேதபாராயணம் ஆரம்பமாயிற்று. பாராயணம் முடியும் சமயம் ஆதவன் அஸ்தமித்து விட்டான். ஜூபிலி ஹாலைச் சுற்றி வைத்திருந்த மண் அகல்களை ஏற்றினார்கள். பிறகு ஸ்விட்சை போட்டதும் தோரணம்போல் கட்டியிருந்த மின்சார விளக்குகள் அழகிய ஒளியைச் சிந்தியவாறு பிரகாசித்தன. ‘ந கர்மணா’ மந்திரம் சொல்லாமல் அருணாசல ஜோதி தரிசனத்திற்காக எல்லோரும் காத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். பணியாளர்கள் தொலைநோக்குக் கருவியைக் (பைனாகுலர்ஸ்) கொண்டு வந்து பகவானிடம் கொடுத்ததும், பகவான் அதன் மூலமாக அருணாசல சிகரத்தின்மேல் பார்வையைச் செலுத்தினார். பகவானின் திருஷ்டி சிகரத்தின்மேல் நிலைக்க எங்கள் பார்வை பகவானின் திவ்ய முகமண்டலத்தில் ஒருமுகப்பட்டது. எங்களுக்குத் தனியாக அருணாசல சிகரத்தைப் பார்க்க வேண்டிய அவசிய மிருக்கவில்லை. அந்தக் காட்சி இங்குள்ளதன் பிரதிபிம்பம்தானே?.... ”*

*- சூரிநாகம்மாவின் ‘ஸ்ரீரமணாச்ரமத்திலிருந்து கடிதங்கள்’, பாகம்-2*

*பகவான் காலத்தில் எவ்வாறு கார்த்திகை தீப தரிசனம் நடைபெறுமோ அவ்வண்ணமே இவ்வருடமும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 05-12-2014 அன்று கார்த்திகை தீப தினத்தன்று மாலை பகவான் சந்நிதியின் முன்பாக பகவானின் உருவப்படத்தை முன்னிலைப்படுத்தி மலையைப் பார்த்தவண்ணம் அருணாசலஸ்துதி பஞ்சகம் மற்றும் ரமண சத்குரு பாராயணத்துடன் கார்த்திகை தீபோற்சவம் மாலை 6 மணிக்கு திரளான பக்தர்களிடையே சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.*

அண்ணாமலையார் கிரிப்பிரதக்ஷிணம் (07-12-2014)

*பக்தர்கள் மட்டும் அண்ணாமலையை கிரிவலம் வருவதில்லை அண்ணாமலையாரே அண்ணாமலையை ஆண்டுக்கு இரண்டுமுறை கிரிவலம் வருவதுண்டு. ஒன்று திருவூடல் உற்சவத்தின்போது மற்றொன்று தீபத் திருவிழாவின்போதாகும். அவ்வண்ணமே இவ்வருடமும் 07-12-2014 அன்று அருணாசலேஸ்வரர் கிரிவலம் நடைபெற்றது.*



# ரமண கேந்திரா டிரஸ்ட் - சென்னை

## ஸ்ரீபகவான் 135ஆவது ஜயந்தி நாள்

*செவ்வாய், ஜனவரி 06, 2015*

*இடம்: 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர்*

*நிகழ்ச்சி நிரல்*

காலை

| | |
|---|---|
| 6.00 a.m. | மங்கள இசை/நாதஸ்வரம் |
| 7.00 a.m. | மஹன்யாசம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம் |
| 10.00 a.m. | ஸ்ரீ ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை |
| 10.45 a.m. | தமிழ்ப் பாராயணம்: "அக்ஷர மணமாலை" |
| 12.15 p.m. | அன்னதானம், தீபாராதனை |

மாலை

| | |
|---|---|
| 4.00 p.m. | விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் |
| 4.30 p.m. | பக்திப் பாடல்கள் - சுந்தரம் இசைப்பள்ளி, சென்னை - Led by Smt. Bhuvaneswari |
| 5.30 p.m. | ஹரிகதா, ஸ்ரீமதி. சியாமளா ராமச்சந்திரன் |
| 6.45 p.m. | மயிலை மாடவீதிகளில் ஸ்ரீபகவான் திருவுருவப் படம் வீதியுலா |
| 7.15 p.m. | "அக்ஷரமணமாலை" - கூட்டுப் பாராயணம், தீபாராதனை |

# ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

## ஸ்ரீபகவான் 135ஆவது ஜயந்தி விழா

இடம்: 6, ராஜேந்திரபிரசாத் சாலை, நேருநகர், குரோம்பேட்டை

*செவ்வாய், 06 ஜனவரி 2015*

*நிகழ்ச்சி நிரல்*

முற்பகல்

| | |
|---|---|
| 8.30 | வேதபாராயணம் |
| 9.00 | ரமண அஷ்டோத்ர பூஜை |
| 9.30 | ரமண சந்நிதிமுறை பண்முறைப் பாடல் - திருமதி அபிராமி, ராதேகிருஷ்ண மண்டலி, சிட்லபாக்கம் மற்றும் அடியார்கள் சேர்ந்திசைத்தல் |
| 10.30 | அக்ஷரமணமாலை மற்றும் புனர்வசு வண்ணம் |
| 11.20 | ஆரத்தி |
| 11.30 | சிறப்புப் பிரசாதம் |

# ரமண கேந்திரா டிரஸ்ட் - சென்னை

## ரமணரின் வாழ்வும் வாக்கும் - தேசிய கருத்தரங்கு

**17&18-1-2015**

**தலைமை** Dr.S. **ராம்மோஹன்; விழாத் தொகுப்பு: திருமதி. வசந்தா ராகவன்**

*இடம்: 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர்*

*சனிக்கிழமை, ஜனவரி 17, 2015*

*பிற்பகல்*

| | |
|---|---|
| *4.00* p.m. | Shri G. Kameshwar "Akshara Manamaalai" |
| *4.30* p.m. | திரு. ஆ. சிதம்பர குற்றாலம் "உள் நோக்கிய பயணம்" |
| *5.30* p.m. | Coffee Break |
| *5.45* p.m. | இசைக்கவி ரமணன் "அற்றது பற்று எனின் உற்றது வீடு" |

*ஞாயிற்றுக்கிழமை, ஜனவரி 18, 2015*

*மாலை*

| | |
|---|---|
| *2.00* p.m. | வேதபாராயணம் |
| *3.00* p.m. | ராதே கிருஷ்ணா மண்டலி,சிட்லபாக்கம், ஸ்ரீ ரமண சந்நிதி முறை பாராயணம் |
| *4.00* p.m. | திரு. ஆ. சிதம்பர குற்றாலம் "உள் நோக்கிய பயணம்" |
| *5.00* p.m. | Coffee Break |
| *5.15* p.m. | Brahmacharini Saranya Chaitanya - Keynote Address |
| *5.45* p.m. | Dr. S. Ram Mohan, "Interactive Session on Bhagavan's Teachings" |

**ஸ்ரீ ரமண மகர்ஷி சத்சங்க வேதி, ஸ்ரீபகவான் 135ஆவது ஜயந்தி விழா**

*செவ்வாய், 06 ஜனவரி 2015*

திருவள்ளுவர் தெரு, கிழக்குத் தாம்பரம்

மாலை 4.00 மணி முதல் திருமதி. ரேவதி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இன்னிசை மற்றும் அக்ஷரமணமாலை பாராயணம்

## பகவான் ஸ்ரீ ரமணர் திருக்கோயில், சேலம்

*ஸ்ரீபகவான் 135ஆவது ஜயந்தி விழா, வியாழன், 01 ஜனவரி 2015, ஸ்ரீ ரமண நகர், வாசகசாலைத் தெரு, பொன்னம்மாபேட்டை, சேலம், காலை 10.00 மணி மதியம் 1.00 வரை. தலைமை ஆ. குமார் ராஜா, பதிப்பாளர், ரமணோதயம் இதழ், சென்னை. சிறப்புரை: டாக்டர் எஸ். ராம்மோஹன், ஆசிரியர், ரமணோதயம் இதழ், சென்னை. அக்ஷரமணமாலை பாராயணம், தீபாராதனை, அருட்பிரசாதம். தொடர்பு: திரு. குப்புசாமி, செல்: 9578226943*

★★★ ★★★

## ஸ்ரீ ரமண சத்சங், நங்கைநல்லூர்

*ஜனவரி 4, 2015 ஞாயிற்றுக்கிழமை*

*ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரவசன மண்டபம், இந்து காலனி, நங்கைநல்லூர், மாலை 4 மணி முதல் அக்ஷரமணமாலை பாராயணம் மற்றும் சிறப்புச் சொற்பொழிவு. தொடர்பு திரு. எஸ். ராமமூர்த்தி, செல்: 9677162338.*

★★★ ★★★

## ரமண கேந்திரம், முருகனார் மந்திரம்,

*12 தெற்கு ரதவீதி, இராமநாதபுரம்*

*ஸ்ரீமத் பரானந்த மஹராஜ், தாயுமானவர் தபோவனம், இராமநாதபுரம் அவர்கள் தலைமையில் அக்ஷரமணமாலை பாராயணம் சிறப்பு வழிபாடு, மதிய சிறப்புப் பிரசாதம். தொடர்பு திரு. சிரஞ்சீவி, செல்: 9360047936*

★★★ ★★★

## ஓம் நமச்சிவாய கோடிநாம சங்கீர்த்தன பக்த சபா

*சித்தி விநாயகர் கோயில் தெரு, புவனேஸ்வரி பேட்டை குடியாத்தம்*

*காலை 7 முதல் இரவு 8 மணவரை, அபிஷேக ஆராதனை, நாமசங்கீர்த்தனம், அக்ஷரமணமாலை பாராயணம், நாள் முழுவதும் அன்னதானம் தொடர்பு திரு. பாபு, செல்: 9500293435*

## ஸ்ரீ ரமண ஜயந்தி பாடல் (புனர்வசு வண்ணம் - முருகனார்)

கண்ணால் உனது கதிர்முக(ம்) நாங்கள் காணப்பெற்று
அண்ணால் கண்ணால்ஆம் பயன் ஆர்ந்தனம் என்பாரால்
எண்ணா நின்றூர் இதயத்து ஒளிரும் ரமணப்பேர்
அண்ணா மலையான் புனர்வசு நன்னாள் அது வண்ணம் 1

இதாஒரு கோடியினர் போல் ஒளிரும் ரமணப்பேர்
உதார குணாளன் உவப்பது நோக்கி உவப்பாரால்
சுதா வடிவான சொரூபானந்த சுயம்ஜோதி
அதாவெமை ஆண்டான் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 2

குலவும் தொண்டர் கூடித் தம்மிற் கொண்டாடும்
தலைவன் பேச்சே தம் உணவாகத் தழைப்பாரால்
இலகும் புகழால் எண் திசை போர்த்த ரமணன்பேச்சு
அலகில் களிப்பாம் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 3

பொருளின் வண்ணம் புகழின் வண்ணம் பொலிவண்ணம்
தெருளின் வண்ணம் திருவின் வண்ணம் திகழ்வண்ணம்
இருளின் வண்ணம் இலையாம் வண்ணம் ரமணன்கூர்
அருளின் வண்ணம் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 4

மீட்சியின் வண்ணம் விஞ்சையின் வண்ணம் வீட்டின்பக்
காட்சியின் வண்ணம் கேள்வியின் வண்ணம் கடவுள்மாப்
பூட்சியின் வண்ணம் பூரண வண்ணம் பொற்றாளுக்கு
ஆட்சியின் வண்ணம் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 5

தேர்கலை எல்லாம் தேறினும் சிந்தை தெளியாது
நீர்கன ஞான நிலைபெற வேட்ட நெஞ்சத்தீர்
சார்கதி காட்டும் சதாசிவ மூர்த்தி ஜயந்திச்சீர்
மார்கழி மாதப் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 6

ஆதர(ம்) மிக்க அடியர் அகக்கார் அகன்றோட
மூதுரையாலே முகவுரை ஓதி மோனம் சேர்
போதனையால் அநுபூதி புணர்க்கும் புலவோன் ஞான
ஆதவ மெய்யன் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 7

விதானம் கட்டித் தொங்கல் விட்டு விநோதம்சேர்
பதாகை தூக்கிப் பற்பல் சிறப்புப் பாரிப்பார்
எதாகிலும் ஓர் குற்றேவல் இயற்றப் பெறுமோஎன்று
அதே நினைவாவர் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 8

மாதவர் வேதியர் மந்திரம் ஓதி வழுத்துவார்
கோதையர் தாம்தம் கொழுந ரொடும் பின்குறுகுவார்
பேதைய ரானோர் மேதைய ராகப் பிறங்குவார்
ஆதர(ம்) நாம் செய் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 9

தாழிசை வண்ணம் சந்த விருத்தம் சாற்றுவார்
ஏழிசை வாணர் யாழொடு வீணையில் ஏற்றுவார்
தோழந் தோகையர் பூப்பலி பொற்சுணம் தூவுவார்
வாழி ரமணன் புனர்வசு நன்னாள் அதுவண்ணம். 10

வாழ்த்து

மோகம் ஒழிக்கும் முனிவன் திருவாய் மொழிவாழி
சோகம் அகற்றும் சுத்தாத் துவிதச் சுடர்வாழி
ஏக சொரூப ரமணன் கருணை இயல் வாழி
காகம் உறவு கலந்தால் போலும் கணம்வாழி. 11

## ரமண கேந்திரா, சென்னை

கிருத்திகா கன பாராயணம் மற்றும் க்ரம பாராயணம்

*மாதவர் வேதியர் மந்திரம் ஓதி வழுத்த, அன்பர்கள் அனைவரும் வேத நன்முடி மேல்விளங்குறும் வித்தக பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை அருள் வார்த்தைகளான*

வேதாந்தத்தே வேறற விளங்கும்
வேதப் பொருள் அருள் அருணாசலா!

*என வேண்டும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்தில் ரமண கேந்திரம் சென்னையில் கன பாராயணம் நடைபெற்று வருகிறது. ஒன்பதாவது ஆண்டாக இந்த வருடமும் நவம்பர் 21, 22 மற்றும் 23 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது.*

*இதைத் துவக்கி வைத்த பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கனபாடிகள், பகவான் ரமணர் மற்றும் மகா பெரியவர்கள், வேதங்களின் மகத்துவங்களை எவ்வாறெல்லாம் வெளிப்படுத்தினர் என்பதை விளக்கினார். திரு காமேஷ்வர் அவர்களும் அதையொட்டி சிறப்பு விளக்கவுரை ஆற்றினார். அனைத்து நாட்களிலும் அடியார்கள் திரளாக கலந்து கொண்ட காட்சி மெய்மறக்க வைத்தது. இவ்வைபவத்தை 'மணி' மாமா அவர்கள் ரமண கேந்திரத்துடன் இணைந்து சிறப்பாக அமைத்துக் கொடுத்தார்கள்.*

வேத நாயகன் வேத பூஷணன்
வேத மேயுரு வாயவன்;
காத லாய்ப்பர வாழ்வி னிற்கடி
தேறி நின்று களித்தவன். (ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம்)

*விளக்கம்: வேதத்தின் தலைவன். வேதங்களை ஆபரணமாகப் பூண்டவன். வேதமே வடிவானவன். விருப்பமோடு பரவாழ்வில் விரைந்து ஏறிச்சென்று களித்தவன் எங்கள் சத்குரு ஸ்ரீ ரமணன்.*

# சுவாமி சாந்தானந்தா பூரி



*வாசிஷ்ட குகை, சுவாமி புருஷோத்தமானந்த பூரி (இவர் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடரான சுவாமி பிரம்மானந்தரின் சீடர்) அவர்களின் சீடரான சுவாமி சாந்தானந்தா பூரி 6-5-1928 ஆம் நாள் திருவையாற்றில் பிறந்து, 1992 ஆம் ஆண்டு உத்தர காசியில் சந்நியாசம் பெற்றார்.*

*சமஸ்கிருதத்தில் ஆழ்ந்த புலமையுடன் திகழ்ந்த இவர், கீதை, பாகவதம், யோக வாசிஷ்டம் மற்றும் அஷ்டாவக்ர கீதை போன்ற வேதாந்த நூல்களிலும் தேர்ந்திருந்தார். அவரது அன்பர்களின் சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதில் வல்லமை பெற்றதுடன் சீரிய சாதகர்களுக்காக அவரது வாசல் எப்பொழுதும் திறந்தேயிருந்தது எனலாம்.*

*எளிய நடையும், ஹாஸ்யமும், கருத்தாழமும் பொருந்திய வகையில் சாதகர்களுக்கு பயன்படக்கூடிய 30க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள இவர் அத்வைத வேதாந்தத்தின் நுண்ணிய கருத்துக்களை கதைகள் மூலமாகவும் சம்பவங்கள் மூலமாகவும் எளிய முறையில் விளக்குவார்.*

*ரமண மகரிஷிகள் சாதகர்களுக்குப் பெரிதும் பரிந்துரைத்த நூல்களான கேனோபநிஷத், நாரத பக்தி சூத்ரா, லலிதா சஹஸ்ரநாமம், விவேகசூடாமணி மற்றும் ரிபுகீதை ஆகிய படைப்புகள் அவரது விளக்கவுரைகளில் தவறாமல் இடம்பெறும்.*

*சுவாமிகள் சந்நியாசத்திற்குப் பிறகு (1992 முதல்) வாசிஷ்ட குகை மற்றும் திருவண்ணாமலை ஸ்ரீரமணாச்ரமத்திலுமே பெரும்பாலான நாட்கள் தங்கினார். ஸ்ரீ ரமணாச்ரமம் வந்த பிறகு ஸ்ரீமாத்ருபூதேச்வர அஷ்டோத்ரம், ஸ்ரீ ரமண சுப்ரபாதம் மற்றும் பிரபத்தி ஆகியவைகளை இயற்றினார்.*

*உடல்நிலை சீரின்மை காரணமாக, செப்டம்பர் மாத இறுதிமுதல், புதுச்சேரி மருத்துவமனையில் சில வாரங்கள் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தபோதிலும் கடைசி முறையாக ஸ்ரீரமணாச்ரமம் செல்ல வேண்டும் என்ற இவரது அவா நிறைவேற்றப்பட்டு மீண்டும் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.*

*இருவாரங்கள் கடந்து 2014, அக்டோபர் 14 ஆம் நாள் தேகத்தை நீத்தார். மறுநாள் ஸ்ரீரமணாச்ரமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில், பெரும்பாக்கம் சாலையில் அவரது அணுக்கத் தொண்டருக்குச் சொந்தமான இடத்தில் சுவாமிகளின் சமாதி வைபவம் கிரமமாக நடந்தேறியது.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| **குரோம்பேட்டை**, ரமணாலயம் | .......... | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | .......... | 9597740111 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | .......... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 9578226943 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | .......... | 9486576687 |
| **ஓசூர்** அசோக்குமார் | .......... | 8643842772 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



ரமணாலயம், குரோம்பேட்டை சார்பில் ரமண மகளிர் குழுவினர் (ராதாகிருஷ்ண மண்டலி, சிட்லபாக்கம்) கார்த்திகை முதல் சோமவாரம் அன்று (17-11-2014) ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஆச்ரமத் தலைவர் மற்றும் அவரது துணைவியார் முன்னிலையில் ஸ்ரீ ரமண சந்நிதிமுறை கூட்டுப் பாராயணம் நிகழ்த்தினர்.



Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

